[illegible]

V.7 No.12 22-3-1934.

JL
m211,N28KN
N34.7.12
199162

KALANILAYAM தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஹு மார்ச் மீ 22உ [No. 12

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 177
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 179
3. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஜாநகஜா ஸமேத)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B.A. 181
4. கம்பராமாயணம்—(அநுமப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 182
5. சூளாமணி (நகரச் சருக்கம்) வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, B.A.B.L. 18[illegible]
6. மதுரைக் கோவை (பகற்குறி)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 187
7. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 188
8. சொப்பனத்தி லன்றோ சுகம் (சிறுகதை)
K. S. முத்துராமலிங்கம் M.A. 189
9. மலர்வனம்—நல்லவள் நீயே நங்காய்
"மதுகரம்" 190
10. சொல்லூடாட்டம் 1. 191
11. வர்த்தமானம் 192

[illegible]லா நிலயம்

கல்சரும் கவிதையும்.

நான்கு வாரங்களாக இத் தலையங்கங்களில் கல்சரின் அவசியத்தை ஒருவாறு விளக்குதற்கு முயன்றோம். செய்யப் புகுவதன்முன் செயப்படுபொருளின் தன்மையும் பயனுந் தெருண்டுகொள்ளற்கு இன்றியமையாதவோர் நிலை கல்சர்நிலை யென்பதும்; தெருண்டவப் பொருள் கடவுளின் கருத்திற்கு இசைந்தளது என்னுந் துணிபு தென்படாத வரையில் கருமமொன்றும் கைக்கொள்வது கல்சரின் இயல்பாகாதென்றும்; நல்லோராய் எல்லாரும் நண்ணி வாழவேண்டு மென்னுமொரு இனிமையின் அருமையே தன திலக்காகக் கொண்டு விவகரிப்பதல்லாது, செல்வமும் செல்வாக்கும் அவைகளுக்குரிய மற்றைய சாதனங்களும் நலஞ் சில மக்களுக்கு நல்குமெனல் கல்சரின் கண்களுக்குக் காணாத காட்சி யென்றும்; எந்தெய்வம் தந்தெய்வம் என்று எந்திரங்களைவழிபடத் தூண்டுகிற சிறுமாநுடத்தின்பால் பெருமோகங்கொள்ளாமல் காக்கவல்லது கல்சர் ஒன்றேஎன்றும்; சுதந்தரம் விடுதலைசமத்துவம் சீர்திருத்தம் முதலிய மொழிகளைவழங்குவார் பலராயினும் அச்சொற்களுக்கும் அவ்வவற்றிற்கு வாய்ந்த உண்மைப்பொருள்களுக்குமிடையே தூதுநடந்து இரண்டையும் பயன்படச் சந்துசெய்கின்ற திறமை கல்சருக்கே உளதென்பதையும், தன்னிஷ்ட மெனுந் தரித்திரத்தில் உழலாமல் கடவுளின் கருத்தென்னும் செல்வத்தில் சேர்த்துவைக்கும்கல்சரை நாம் கைவிட்டால் அப்புறம் கூடுவதொன்றுமில்லை என்பதன் காரணத்தையும், இன்னவாறு இவைகளுடன் தொடர்புடையவைகளையும் இதுகாறும் காட்டினோம். மேலினி நாம் [illegible]ப்பீற் கிருபனு[illegible]ஷற்றை உய்த்துணர்தற்கு இ[illegible]த தொகுத்துச் சு[illegible]வேண்டி நேர்ந்தது.

ஆஸ்க்கார் வைல்ட், கலைத்திறம் நுனிக்கும் திறத்தினைப் பற்றிக் கூறியுள்ள மொழிகளைத்தழுவி ஸ்ரீமான் K. இராஜகோபாலன் வரைந்துவந்த (1929 வருடம் 2 வால்யூம் 567 வது பக்கம்) முற்றுப்பெற்ற கட்டுரையைக் கருத்துட்கொண்டோர், செய்வதைக்காட்டிலும் சிந்தித்திருப்பதன் சிறப்பைக் கூறுமாற்றால், அதுவும், நம் நான்குதலையங்கங்களும் பெரும்பாலும் ஒத்துநடக்கக் கண்டிருப்பார். "ஆரவாரஞ் செய்து திரியும் அரசியல் வாதிகளும், சமயப்பிரசாரஞ் செய்வோரும் சமூகச் சீர்திருத்தகாரர்களும் தத்தம் வயிற்றிற்கு வழிதேடி வாயாடும் கீழ்மக்கள். அவர்களை யொழித்து, சிந்தனையால் சிறப்புள்ள,தத்தம்உள்ளுலகில் வாழாதார்வாழாதாரே," என்ற வாக்கியம் ஒன்று,அவ் வாஸ்க்கார் வைல்டினின்று மொழிபெயர்ந்து ஸ்ரீ. இராஜகோபாலனது கட்டுரையின் இறுதியில் தோன்றியது. இக் கடுஞ் சொற்கள் மேனாட்டுப் பொதுஜன வாழ்க்கைக்குப் பொருந்துமோ, யாதோ! அது எவ்வாறாயினும் இந்நாள் நம்நாட்டுவிஷயத்தில், இவ்வகைத் துறைகளிலீடுபட்டிருப்பவர் சிற்சிலரைத்தவிர ஏனையோர் "வயிற்றிற்கே வழிதேடி வாயாடும் கீழ்மக்கள்" ஆகார் என்பதை உன்னி, எல்லாரும் அவ்விதமே எனத் தைப்பதுபோன்ற அவ்வாக்கியத்தை நாம் நீக்கிவிட்டோம். மெய்யுணர்வின்மையால் முயல்கின்றஇப்பேதமையை வன்சொல்வழங்கி யழைப்பானேன்! எனினும், காரிய சாத்ய நிபுணர்களென்ற நினைவில் பற்பல நிகழ்த்துவதற்கு முற்படுதல் அறிவின் முதிர்ச்சிக் கோர் அடையாள மன்றென்னும் கொள்கையுடையார் ஆஸ்க்கார் வைல்ட் ஒருவரே அல்லர். கண்ணபிரான் கூற்றாக, "உலகினர் விழித்திருக்கின்றநிலையில் மெய்யுணர்ந்தவன்

உறங்குகின்றான்; அவர்கள் உறங்கு நிலையில் இவன் விழித்திருக்கின்றான்" என்று ஸ்ரீமான் T. P. மீனாக்ஷி சுந்தரம், தன்னுடைய 'குலசேகரர்' என்னுங்கட்டுரையிலெடுத்துக் காட்டியதன் பொருளும் இன்னதேயாம்.

ஆதலின், அறிதுயி லமர்ந்த ஆனந்தநிலை இதனைத்தான் நாம் கல்சர் என்று போற்றிவந்தோம். அதன் தன்மையையும்பயனையும் கூறியதோடு எமது கருமம் முற்றுறாது. அந்நிலையை எய்துதற்கு உரிய நெறியையும் சண்டு இயம்புதல்வேண்டும். இந்நிலை மனத்திற் கியன்றது; மனத்தின் சார்பானது. தேகப்பயிற்சி அவயவங்களைச் செம்மைசெய்து அவைகளின் தன்மைபிறழாமல் தொழில்புரிய வைப்பதுபோன்று மனத்திற்கும் இக்கல்சர்நிலை யடைதற்கேற்ற பயிற்சிவேண்டும். இச்சிறு உண்மையைப் பெரும்பாலோர் மறந்துவிடுகின்றனர். மறந்து, விதிகளையும் விலக்குகளையும் விளம்பியவுடன் யாவரும் தாம் எண்ணியவாங்கு ஒழுக்கமும் விழுப்பமும் உடையவ ராகிவிடுவார் என நம்பி விவகரித்தலால் விளையவல்ல நலம் ஒன்றுமில்லை. எனின், மனமாண்புமேம்பட எப்பயிற்சி யாவற்றினும் சிறந்ததென்பதைச் சிறிது செப்புவோம்.

மனத்தின் முயற்சிகள் இருவேறு வகையனஆம். ஒன்று பகுத்தறிவு, மற்றது மனோபாவம். எவ்வாறு பிறப்பினும், பிறந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும் மற்ற எண்ணங்களோடு கொள்கின்ற சம்பந்தத்தைப் பற்றிச் சிந்திக்கும்மனத்தன்மையைப் பகுத்தறிவுஎனக்கருதலாம். பகுத்தறிவுஎன்னுமிது ஒரு நிலையேயாம், செயல்அன்று. மற்று, மனமானது அவ்வெண்ணங்களின்மீது தன்னுடைய சுயவண்ணத்தைப் பூசி, பஞ்சபூதங்கள் பல்வேறுவகையில் சேர்வதால் வஸ்துக்கள் பலப்பல வேறுவேறாகிக் காண்பதுபோல், அவ்வெண்ணங்களினது சேர்க்கையால் பிற எண்ணங்கள் அமையும்படிகூட்டுங்கால் அம்மனம் 'மனோபாவம்' என்னுந் தன்மையை அடைவதாகின்றது. இம்மனோபாவம்பலவற்றை ஒன்றாகும்படி கூட்டிவைக்கின்ற கொள்கையை மேற்கொண்டுளது. ஆதலால்அது, பிரபஞ்ச இயல்பிற்கும் சிருஷ்டிக்கும் பொதுவாக அமைந்துள்ளதோற்றங்களை ஒருபொருள்படுத்தி நோக்கும்தன்மைத்து. பகுத்தறிவோ ஒன்றுவிட் டொன்றை வேறுவேறாகப் பிரித்து அகற்றும். எண்ணங்களெல்லாம் வெவ்வேறாகத் தோன்றினும் அடிப்படையான வொருபொதுப் பொருத்தம் அவைகளுக்குள் முதலாக அமைந்திருக்கின்ற தென்பதைக் கருதுவதின்றியே, பொதுவான சிலமுடிவுகளை எய்துவிப்பதற் கேற்ற குறிகளென்றே தனித்தனியாக அவ்வெண்ணங்களைப் பகுத்தறிவு கருதுகின்றது. ஒருவிஷயத்தின் தன்மை இன்னது இன்னதென்று முன்னரே தெரிந்திருக்கின்ற அத்தன்மைகளைக் கணக்கெண்ணிக் காட்டும் பகுத்தறிவு; மனோபாவமோ அந்தத் தன்மைகளால் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் அடையவல்ல பயன் யாதென்பதை உய்த்துணரும். பொருள்களுக்கிடையே உள்ள வேற்றுமையைப் பகுத்தறிவும், ஒற்றுமையை மனோபாவமும் பாராட்டுகின்றன. கருவியுங் கர்த்தாவும் போலவும், உடலும் உயிரும் போலவும், நிழலும் பொருளும்போலவும் பகுத்தறிவு மனோபாவத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

இன்ன தன்மை வாய்ந்ததாகிய மனோபாவம் புறத்திலே தோன்றப் புரிந்ததே கவிதை எனப்படும். மனிதன் எந்தநாள் சிருஷ்டிக்கப் பெற்றானோ அந்த நாளிலேயே கவிதையும் அவனுடன் தோன்றியவோர் திப்பிய தத்துவம். மனிதர் ஒருவிதத்தில் இல்பொருளுவமையாய்ப் புள்ளாங்குழலை ஒத்திருக்கின்றார். அவ்விசைக்கருவிக்குள் காற்றானது ஒருபுறத்தில் செலுத்தப்பெற மறுபுறத்தில் அக்காற்று வெளிவரலாகின்றது. அவ்வாறே வெளிநின்று உள்ளும் உள்நின்று வெளிக்கும் பற்பலவுணர்ச்சிகள் மனிதனை ஊடுருவிச் செல்வனவாகித் தொடர்கின்றன. உட்சென்ற வன்மைக்கும் மென்மைக்கும் ஏற்றவாறும், வெளிவரும் துவாரங்களின் தூரங்களுக்கு ஏற்றவாறும், அக்காற்று வெவ்வேறுசுவரங்களை மாற்றிமாற்றி இசைத்துத்தருகின்ற தன்மையை அறிவோம். புள்ளாங்குழல் மனிதனை ஒத்திருக்கின்றதென்னும் உவமை இதுவரையில்தான் செல்லும்; இதன்மேல் செல்லாது. ஏனெனின், சுவரங்களை மாத்திரமே புள்ளாங்குழல் தானாகக்கொடுக்க இயலுமேயல்லாமல், சுருதியும் கமகமும் தருகின்ற வன்மை அதனிற்கு இல்லை. இவ்விரண்டும், இசைப்பவன் செயல்கள். மனிதனுடைய தன்மையோ அவ்வாறன்று. ஸ்வரங்களன்றிச் சுருதியையுந் தானே சேர்த்துக்கொள்வான் இவன். உட்சென்றஉணர்வினால் இயக்கமொன்று அங்கு உண்டாகின்றது. அவ்வியக்கத்தை, அதனைஉறுவித்தஉணர்வினோடுநன்றாகச் சமஞ்செய்து அமைதிபெற வைக்கின்ற தத்துவம் ஒன்று மனிதனது உள்ளத்தின்பால் என்றுமுளது. ஆதலால், உட்கொண்ட காற்றைத் தன்னுளே தானாகவே இசைபடச் சேர்த்தும் பிரித்தும் விடவல்லகுழலொன்றுஉளதாயின் அதுவே மனிதனை முற்றிலும் ஒக்கும். விளையாடிக்கொண்டிருக்கின்ற ஒரு குழந்தையானது தன்னுடைய உவகையைத் தானாகவே கூவியுங் குதித்தும் வெளிப்படுத்தும்: அக்குழந்தையின் குரல் ஏறி இறங்குகின்ற ஒவ்வொரு மாறுபாடும், அது ஆடுகின்ற கூத்தின் விகற்பம் ஒவ்வொன்றும் அவ்வுவகையை எழுப்பிய உணர்விற்கு ஏற்றதா யமைந்திருப்பது திண்ணம். உண்மையில் இக்குரலும் குதிப்பும் அவ்வுணர்வின் அபிநயங்களேயாம். உணர்வு காரணம்; அக்காரணத்தின் காரியம் உவகை. அவ்வுவகை நிகழ்கின்ற காலத்தைக் குரலாலும் குதிப்பாலும் நீட்டிக்கின்றவாற்றால் இக்குழந்தை, அவ்வுவகைக்குக் காரணமாயிருந்த உணர்வின் நினைவையும் நீட்டித்துக்கொள்ள நேரிடுகின்றது. ஒரு குழந்தைக்கும், அதனைக் களிப்புறச் செய்கின்ற விளையாட்டுப் பதுமைக்கும் உள்ள தொடர்பு இத்தகையது. உயரிய விஷயங்களுக்கும் கவிதைக்கும் உளதாய உறவும் இன்னதே. ஓர்கருத்தைக் காரியமாக மாற்றி யுழல்வது மனிதத்தனம். தெய்விகக் கவிதையோ காரியத்தையும் பொருளையும் கருத்தாக மாற்றி உவப்பதாகும். பொம்மையைச் செய்பவன் வெறும் மனிதனே; மற்று அப்பொம்மையை எடுத்து அதற்குப் பாலூட்டித் தாலாட்டிக் கலியாணமும் செய்து வைக்கும் குழந்தைகளோ கவிஞர். பொம்மையைச் செய்தவன் விலையே பெறுவான், அதனின்று உவகை பெறுபவர் இம்மக்களே. பொம்மைஉடைந்ததாயின், 'விலையை இழந்தேனே' என்று வருந்துவான் அவன்; இச்சிறுமக்களோ, தம்முடைய உவகைக்கு இடையூறுவந்ததேஎன ஏங்குவார். இவ்வுவகையும்ஏக்கமும் தெய்வத்தன்மை எய்துவிக்கும்; அவ்விலையும் வருத்தமும், மனிதத்தனமும் [illegible]டும்.

Fm2ll,N22KN
199162

தமிழ்ப்பாடம் 112.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[166-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

'இன்று இருவேமும் உரைத்தமொழி பிறர் அறியவோதாதொழிக' என்று சகாதேவனை விதித்தபின்னர்ப் பாண்டவர் இருந்தவிடம் இருவரும் மீண்டடைந்து, கண்ணன் பாஞ்சாலியை நோக்கினாய்ச் "சகாதேவனும் சமாதானமே தக்கது என்றனன்" எனக் கூறினான். இப்பொருள்படும் செய்யுள் விடலாயிற்று.

தருமனுக்குங் கருத்திதுவே
  தமருடன்போர் புரியாம
லிருநிலத்தி லுடன்வாழ்த
  லெனக்குநினை வென்றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோர
  மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ்
  வீழ்ந்தழுதாண் மின்னனையாள் 32.

யாவரும் ஒன்றுகூடி வாழவேண்டுமென்பதே தன்னுடைய கருத்துமாம், என்று கண்ணனும் கூறிவிடவே பாஞ்சாலி பதைக்கின்றாள்.

பதவுரை.

தருமனுக்கும் - தருமராஜனுக்கும், கருத்து இதுவே - இதுவே எண்ணம் ; தமர் உடன் - சுற்றத்தார்களுடன், போர்புரியாமல் - யுத்தம் ஒன்றும் செய்யாமல், இரு - பெரிய, நிலத்தில்-பூமியில், உடன் வாழ்தல் - சேர்ந்துவாழ்தல்தான், எனக்கும் - எனக் கும், நினைவு - எண்ணம், என்று உரைத்தான்-என்று கண்ணன் சொன்னான்.

(உடனே) மின் அனையாள் - மின்னலைப் போன்றவளாகிய பாஞ்சாலி, வரி - வரிகள் படர்ந்த, மலர்-தாமரைமலர் போன்ற, கண் - கண்களிலிருந்து, புனல் சோர - நீர் பெருகவும், மலர் - மலர்கள் அணிவதை, மறந்த - விட்டுவிட்ட, குழல் - கூந்தல், சோர - சரியவும், (கிருஷ்ணனது) விரை - வாசனை பொருந்திய, மலர்-தாமரைமலர் போன்ற, செம் - செம்மையான, சேஅடி கீழ் - சிவந்த பாதங்களில், வீழ்ந்து - விழுந்து, அழுதாள் - கதறினாள்.

விரிவுரை -கண்ணனதுசேர்க்கையால்சகாதேவனும் சிறிது குறும்புசெய்ய நினைத்தான்போலும். ஆதலால் சமாதானம் ஒன்றும் நேராதென்று நிச்சயமாய் அவனுக்குத் தெரிந்திருந்தும் தன் சொற்கேட்டுப் பேதை பாஞ்சாலிஎவ்வாறு பதைக்கின்றாள் என்று பார்க்கும் ஆசையினாலேயே அவன் அவ்வாறு 'பழுதில் புகழ்ப் பாஞ்சாலி நீண்ட கருங்குழல் சோர நின்றாளை முகநோக்கிக்' கூறினான் என்று கவி இதற்கு முன்செய்யுளில் பாடினார். ஆயினும் முன்செய்யுளில் பாஞ்சாலியின் முகத்தை நோக்கியதும், 'இளையோன் சந்துமிகவினிதென்றான்' என்றதும், கிருஷ்ணன் கூறுவதாகவே கொண்டு, தருமனுக்கும் கருத்திதுவே என்ற இந்தச் செய்யுளினது தொடக்கத்தோடு சேர்த்துப் பொருள்படுத்துவதும் கூடும். தமருடன் போர்புரியாது வாழ்வதேதனக்கும்கருத்தென்று கண்ணனும்கூறியதுவஞ்சனை வார்த்தைகள் என்பதற்கு ஐயமில்லை. இதனோடு சகாதேவனும்அவ்வாறேகூறினான் எனக் கண்ணனே கூறலாவது அவனுடைய மற்ற மாயங்களுக்கு இணங்கியதாகவேயிருக்கும். இதனால், சத்துவ உணர்வுடைய சகாதேவன் விளையாட்டிற்கேனும் வாய்மையல்லாதன விளம்பாத நிலையில் நின்றவன் ஆவான். மற்று, முன்செய்யுளின்ஈற்றடியைச் சகாதேவனது வாசகமென்று கொள்வதனால் குறையில்லை என்றக்கால், இச் செய்யுளின் முதலிரண்டடிகளையுங்கூட அவனுடைய வாசகமாகவே ஏற்பினும் அமையும். இன்னவாறு, உரைப்பவர் எவரென்று உறுதியாய் உணரஇயலாவகை வில்லிபுத்தூரர் பல விடங்களில் அமைத்துச் சுவையைப் பெருக்குவது முண்டு.

சாலக் கனகன்றன் தனிமைந்தனை முனிந்த
காலத் தவனறைந்த கற்றா ணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன் முன்னின்ற நெடுமாலே. 33.

பாஞ்சாலி கண்ணபிரானைக் கூவி முறையிடுகின்றாள்.

பதவுரை.

கனகன் - இரண்யன், தன் - தன்னுடைய, தனி - ஒப்பற்ற, மைந்தனை-பிள்ளையாகிய பிரகலாதனை, சால - மிகவும், முனிந்த காலத்து - கோபித்துக்கொண்ட காலத்தில், அவன் - அந்த இரண்யன், அறைந்த - அடித்த, கல்தூண் இடை - கல்தூணிற்கு மத்தியிலே, வந்தாய் - வந்து தோன்றினவனும்,

மூலம் பேர் - ஆதி மூலமே என்ற பேரை, இட்டு- சொல்லி, அழைத்த - கூப்பிட்ட, மும்மதம்-மூன்று மதத்தினது, மால் - மயக்கத்யைுதைடய, யானைக்கு - கஜேந்திரனுக்கு, நீலக் கிரிபோல் - ஒரு நீலமலைபோல, முன்-எதிரே, நின்ற - வந்து தோன்றினவனும் ஆன, நெடுமாலே - திருமாலே!

விரிவுரை:—இவ்விதம் முன் பிரஹலாதனுக்கும் கஜேந்திரனுக்கும் வந்தடைந்த இடுக்கண்களைத் தீர்த்தவனே என்று பாஞ்சாலி அழைப்பது, அவ்வாறே தன்னுடைய குறையையும் தீர்க்கவேண்டுமென்றநோக்கமுடையதாதலால், இது கருத்துடை யடைஅணி, ஆகும்.

[தோன்
கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே. 34.

பதவுரை.

கண்ணிலான் - குருடனாகிய திருதராஷ்டிரன், பெற்று எடுத்தோன்-பெற்ற பிள்ளையாகிய துச்சாதனன், கற்றை - கற்றையாய் அடர்ந்த, குழல் - என் கூந்தலை, பிடித்து - பிடித்துக்கொண்டு, துகில் - எனதுபுடவையை, பற்றி-கைபால்பற்றி, உரிய-அவிழ்க்க, பாண்டவர் உம் - என் கணவர்களாகிய பஞ்சபாண்டவர்களும், பார்த்து-பார்த்துக்கொண்டு, இருந்தார்-சும்மாவிருந்தனர்.

கொற்றம்-வெற்றியுடைய, தனி-ஒப்பில்லாத, திகிரி-சக்ராயுதத்தை யுடைய, கோவிந்தா - கோவிந்தனே, அற்றைக்கும் - அந்த நாளிலும் கூட, என் மானம் -

எனது மானத்தை, நீ அன்றி - நீ அல்லாது, ஆர் வேறு - வேறு எவர், காத்தார் - காத்தார்கள்.

மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்றுதமக் கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்றுமுடிப்பதினி யெம்பெருமானென்றழுதாள்.

பதவுரை.

மன்றில் - ராஜசபையில், அழைத்து-என்னை வரவழைத்து, எனக்கு - எனக்கு, மாசு அளித்த - அவமானத்தை விளைவித்த,மன்னவன்பால் - துரியோதனனிடத்தில்,திறல் வீரர்- பராக்கிரமம் பொருந்தியவீரர்களாகிய பாண்டவர்கள்,சென்று-போய்,தமக்கு-தங்களுக்கு, ஐந்து ஊர் - ஐந்து ஊர்களை,பெற்று-யாசகம் செய்து வாங்கி, இருந்தால் - வாழ்ந்திருப்பாராஞல்

எம்பெருமான் - எமது பெருமானே, வல்வினையேன்-கொடிய வினையையுடைய நான், அன்றுவிரித்த - துகில் உரிந்த நாள்தொட்டு நான் விரித்துக்கொண்டிருக்கின்ற, அரும் கூந்தல் - அருமையான கூந்தலை, இனி - இனிமேல், என்று முடிப்பது - நான் எப்பொழுது முடித்துக்கொள்வது, என்று அழுதாள் - என முறையிட்டுப் (பாஞ்சாலி) புலம்பினள்.

இலக்கணம்

யகர ரகர ழகர மெய்களையேனும், உயிரையேனும் ஈற்றில் உடைய சொற்கள், வல்லினமெய்யை முதலில் உடைய சொற்களோடு புணரும்போது எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாமல் இயல்பாகவே இருப்பது பொதுவிதியென்று முன்னர் (133வது பக்கம்) கூறினோம். இதற்கு மாறுபிருக்கின்ற சிலசிறப்புவிதிகளைப் பார்ப்போம்.

1. நிலைமொழியிறுதி வன்தொடர்க் குற்றியலுகரமாயிருக்குமாயின், வருமொழிமுதலில் வருகின்ற வல்லெழுத்து எழுவாய்த்தொடரிலும் மிகுந்தேபுணரும் (குற்றியலுகரத்தின் இலக்கணத்தை 6வது வால்யூம் 145, 163, 183வது பக்கங்களிற் காண்க)

நாக்கு + துடித்தது = நாக்குத்துடித்தது
பற்று + சிதைந்தது = பற்றுச்சிதைந்தது
பூட்டு + பெரிது = பூட்டுப்பெரிது
முத்து + குவிந்தது = முத்துக்குவிந்தது
பேச்சு + பரவியது = பேச்சுப்பரவியது
அடிப்பு + சிறிது = அடிப்புச்சிறிது

குறிப்பு:—வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு முன்தான் வலிமிகும். மற்றத்தொடர்களில், பாம்பு கடித்தது (மென்றொடர்), போழ்து புலர்ந்தது (இடைத்தொடர்), படகு கவிழ்ந்தது (உயிர்த்தொடர்), ஆறு பெருகியது (நெடிற்றொடர்), எஃகு சிறிது (ஆய்தத்தொடர்) என வலி மிகாது.

2. நிலைமொழி ஓரெழுத்தொருமொழியாயின்எழுவாய்த்தொடரிலும் வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்தே பெரும்பான்மை புணர்கின்றது.

தீ + பற்றியது = தீப்பற்றியது
பூ + கமழும் = பூக்கமழும்
நா + குறிது = நாக்குறிது.

குறிப்பு:—எனினும், கை மை,என்பனபோல் ஐகார உயிரோடு சேர்ந்த ஓரெழுத்தொருமொழிகளுக்குப் பின் வல்லினமெய் மிகுவதில்லை. கை + குறிது = கை குறிது. மை + கரிது = மைகரிது.

ஆ (பசு), மா (விலங்கு) என்னும் ஓரெழுத்தொருமொழிகளுக்குப் பின்னும், நீ என்ற முன்னிலைச் சொல்லின் பின்னும் எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது. ஆ + பெரிது = ஆபெரிது, மா + கொன்றது = மாகொன்றது. நீ + சொன்னாய் = நீ சொன்னாய்.

3. முதலெழுத்துக் குறிலாகவும் மற்ற எழுத்து நெடிலாகவும் அமைந்த இரண்டெழுத்துச்சொற்கள் நிலைமொழியாயிருக்குமாயின் எழுவாய்த்தொடரிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்வதும் உண்டு.

நறா + சுரந்தது = நறாச் சுரந்தது.
கரா + பிடித்தது = கராப் பிடித்தது.
நிலா + பொழிந்தது = நிலாப் பொழிந்தது.

4. தாரா, என்று ஒரு சொல் தமிழில் உளது.இது நாரை என்கிற பறவையின் பெயராகும். இச்சொல்லின்பின் வருகின்ற வல்லெழுத்து எழுவாய்த்தொடரிலும் மிகுகின்றது.

தாரா + குறிது = தாராக் குறிது

5. இரண்டு குற்றெழுத்துக்களாலான சொல் நிலைமொழியாகி, வருமொழிமுதல் வல்லினமெய்யோடு புணரும்போது எழுவாய்த்தொடரில் அவ் வல்லினமெய் மிகுந்தேனும் மிகாமலேனும் புணரலாம்.

கிளி + குறிது = கிளிக்குறிது, அல்லது கிளிகுறிது.
தினை + சிறிது = தினைச்சிறிது, அல்லது தினைசிறிது.

கடு, விள, என்னும் சொற்களுக்குப்பின் கடுக்கொடிது, விளப்பெரிது என வல்லெழுத்து மிகுந்தே புணரும்.

ஆனால், அது இது எது என்னும் சுட்டு அல்லது வினா எழுத்துக்களை முதலில் யுடையதாய், இரண்டு குறில்களால் அமைந்திருக்கின்ற சொற்களுக்குப்பின் மிகாது.

அது + பெரிது = அது பெரிது
இது + பெரிது = இது பெரிது
எது + சிறிது = எது சிறிது.

6. ஊ, என்னும் உயிரில் முடிகின்ற சொற்களுக்குப்பின்எழுவாய்த்தொடரிலும் வல்லெழுத்துமிகும்.

கொண்மூ + பொழிந்தது = கொண்மூப் பொழிந்தது.
(கொண்மூ = மேகம்)

எனவே, இந்த ஆறு சிறப்பு விதிகளுக்குள் அடங்காதபோதெல்லாம் எழுவாய்த்தொடரில் வல்லெழுத்து மிகாதென்று பொதுவிதியின்படி நாம் கொள்ள வேண்டும்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

III. ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்.

[174-வது பக்கத் தொடர்ச்சி]

3. ராகம்—அஸாவேரி] [தாளம்—ஆதி.

பல்லவி

ஜநகஜா ஸமேத துர்ஜநாக புருஹூத..(ஜநக)

அநுபல்லவி

ஸநகாதி ஸமுநி கீத ஸஜ்ஜந கண பாரிஜாத..(ஜநக)

சரணங்கள்

1. தேவதேவ ஸகல ஜீவந புவநேச - பாவஜரிபு பாவஸதந பவ்ய குணமணி கோஶ............(ஜநக)
2. ஜலஜாப்த குலாம்போநிதி ஜலஜ ஹரிபரேஶ—ஜலஜாருண சரண ஸுரஜலதா ஶுகஸ்ரீஶ...(ஜநக)
3. ஶ்யாம ஸுந்த ராங்க ரங்க ஶயந விகதமாய - தாமஸ ஜன ஹ்ருதய தூர-த்யாகராஜகேய...(ஜநக)

பொருள்

ஜநகஜா ஸமேத - சீதாதேவியின் கொழுநனே! துர்ஜன அக புருஹூத - துஷ்ட சுபாவ முடையவர்களுடைய பாவங்களாகிய விரோதிகளை முறியடிப்பதில் வஜ்ராயுததாரிய தேவேந்திரனை யொத்தவனே.

ஸநகாதி ஸுமுநி கீத - ஸநகர் முதலிய சிறந்த முனிவர்களால் கொண்டாடப்பட்டவனே! ஸத்ஜன கண பாரிஜாத - சாதுஜனக் கூட்டங்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றுவதில் தெய்வலோகத் தருவான பாரிஜாதத்தை யொத்தவனே!

தேவ தேவ - தேவாதி தேவனே! ஸகல ஜீவன - சகல ஜீவராசிகளுக்கும் உயிரானவனே! புவந ஈச - (சகல) லோகங்களுக்கும் ஈசுவரனே! பாவஜரிபுபாவஸதன-மன்மதனுக்குச் சத்ருவான சதாசிவனுடைய மனத்தைக் கோயிலாகக் கொண்டவனே! பவ்ய குணமணி கோச - அநந்த கல்யாணகுணங்களான ரத்தினங்களாலாகிய ஹாரம் போன்றவனே!

ஜலஜ ஆப்தகுல அம்போநிதி ஜலஜ - தாமரையின்நேயனை சூரிய குலமாகிய கடலில் உதித்த தாமரைபோன்றவனே! ஹரி - ஹரியே! பரேச - சர்வேச்வரனே! ஜலஜ அருண சரண - தாமரைபோன்ற சிவந்து பிரகாசிக்கும் திருவடிகளையுடையவனே! அஸுர ஜலத ஆசுக - அசுரர்களாகிய மேகங்களைச் சிதறடிக்கும் புயற்காற்றுப்போன்றவனே! ஸ்ரீஶ - லக்ஷ்மி பிராட்டியின் கொழுநனே!

ஶ்யாம ஸுந்தராங்க - நீலநிறம் பொருந்திய திவ்விய ரூபனே! ரங்க சயன - ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் கிடந்த கோலங் கொண்டருள்வோனே! விகத மாயா - மாயையிற் பற்றற்றவனே; தாமஸ ஜன ஹ்ருதய தூர - தாமஸ குணம் பொருந்தியவர்களின் மனத்திற் கெட்டாதவனே! த்யாகராஜ கேய- ஸ்ரீத்யாகராஜன் பாடிக் கொண்டாடத் தக்கவனே!

குறிப்பு

இக்கீர்த்தனம்முற்றிலும் எம்பெருமானை அழைக்கின்ற விளியாகவே அமைந்துள்ளது.

அஸாவேரி ராக லக்ஷணம்

இவ்விராகம் 72 மேளகர்த்தா மதப்படி 8வது மேளகர்த்தாவான ஹநுமதோடியில் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஆரோஹணத்தில் காந்தார நிஷாதங்கள் வர்ஜ்யம். இது பாஷாங்க ராகம். ஆரோஹணத்தில் சதுச்ருதி ரிஷபம் பேசும். இதில் காந்தாரத்தையும் சிறிது அளவிற் குறைவாகவும் கமகமாகவும் பிடிக்கவேண்டும். அவரோஹணத்தில் ஸநிதபமகரிஸ என்ற ஸம்பூர்ணப் பிரயோகம் காணப்படினும், 'ஸநிஸ்பதமபரிகாரிஸ' - என்றும்,'ஸரிதஸ் பதமபரிகாரிஸ' என்றும் வழங்குகின்ற சஞ்சாரங்களே ராகக் களையை நன்கு புலப்படுத்துகின்றன. இந்த ராகத்தின் பூரண லக்ஷணங்களும் கீதகீர்த்தனங்களால்மட்டுமே நன்கு யறியத்தக்கவை.

ஆரோஹணம்:—ஸரிமபதஸ்.

அவரோஹணம்:-ஸ்நிதபமகரிஸ-ஸ்நிஸ்பதமபரிகாரிஸ.

ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[இக்கீர்த்தனத்தை மத்திம காலத்திற் பாடவேண்டும்.]

பல்லவி

ரிமரீ	மா பா; பா ‖	த ப மா	கா; ரீ ஸா ‖	ரி ம ரீ	மா பா; பா ‖	ம ப த ப	பமகாரீஸா	‖
ஜ . ந	க ஜா; ஸ ‖	மே . .	. ; . த ‖	ஜ . ந	க ஜா; ஸ ‖	மே . . .	. . . . த	‖
ரிமரீ	மா பா; பா ‖	ம ப த ப	பமகரி - ஸரிமா ‖	; - பா	தா ஸ்ா; ஸ்ா ‖	ஸ்நிதப	பமகா ரீஸா	‖
ஜ . ந	க ஜா; ஸ ‖	மே . . .	. . . . - த . . . ‖	; - துர்	ஜ நா; க ‖	பு . ரு .	ஹூத . . . த	‖

ரிமரீ	மா பா; பா ‖ ம ப த ப	பமகரி - ஸரிமா ‖	; - பா	தா ஸ்; ஸ்ா ‖	ஸ்நிஸ் - ப	த - மப - ரிகாரிஸ ‖	
ஜ . ந	க ஜா; ஸ ‖ மே . . .	. . . . - த . . ‖	; - தா	ஜ நா; க ‖	பு . . - ரு	. - ஹூ . - . . த . ‖	

(ஜநகஜாஸமேத)

அநுபல்லவி

; * பா	மா பா ;தா ‖ தா பா	தா ஸா ; ஸ்ா ‖	; * நி த	ப ம-பா ; தா ‖ தா பா	தாஸ்ா ; ஸ்ா ‖		
; * ஸ	ந கா ;தி ‖ ஸா மு	நி கீ ; த ‖	; * ஸ .	ந . -கா ; தி ‖ ஸா மு	நி கீ ; த ‖		
; *நி த	பம-பா;தா ‖ தா பா	தா ஸ்ரிக்ரி ‖	ஸ்ரீ	தாஸ்ா பாதா ‖ ம பதப	பம-காரீஸா ‖		
; *ஸ .	ந . -கா;தி ‖ ஸா மு	நி கீ . . த ‖	ஸ .	ஜ்ஜந க ண ‖ பா . . .	ரி . -ஜா . த ‖		

(ஜநகஜா ஸமேத)

சரணம்

பா ;	பா-பா ;பா ‖ பமகா	ரீஸா தாஸா ‖	ரிமரீ	மா-பாபாபா ‖ ம ப மா	காகாரீஸா ‖		
ஸ்யா ;	ம -ஸாந்;த ‖ ராங்.	க ர ங் . க ‖	ச - ய	ன -வி ந த ‖ மா . .	. . . ய ‖		
பா ;	பா-பா ;பா ‖ மபதப	பமகாரீஸா ‖	ரிமரீ	மா -பாபாபா ‖ மபமா	காகா ரீஸா ‖		
ஸ்யா ;	ம-ஸாந் ;த ‖ ராங். .	. . க ரங்க ‖	ச . ய	ன -விகத ‖ மா . .	. . ய . ‖		

"தாமஸ ஜந.........கேய" அனுபல்லவிபோலப் பாடவேண்டும். இதர சரணங்களும் இச்சரணத்தைப் போலவே பாடப்பட வேண்டும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[172-வது பக்கத் தொடர்ச்சி]

குரங்கினைச் சரணங் கோரிய சரிதம்.

அன்னவாறு வினவிய அநுமனுக்குத் தம் மரபு யாவும் சோர்விலாது இளையவீரன் சொல்லுற்றான்:—

சூரியன் மரபிற் றோன்றிச் சுடர்நெடு நேமி யாண்ட
ஆரிய னமரர்க் காக வசுரரை யாவி யுண்ட
வீரியன் வேள்வி செய்து விண்ணுல கோடு மாண்ட
காரியன் கருணை யன்ன கண்ணனக் கவிகை மன்னன்

[சூரியவம்சத்தில் பிறந்து, தனது ஆஜ்ஞாசக்ரமானது அதன் நெறியினின்று விலகாமல் அதனை முறைப்படி ஆட்சிசெய்தமேன்மகன்; தேவர்களின்பொருட்டுச் சம்பரன் முதலியஅசுரர்களின் உயிரைக்குடித்தபராக்கிரமம் உடையவன்;யாகங்கள்செய்துவிண்ணுலகத்தையும் இந்திரனோடு இருந்துஆண்ட செயலுடையவன். கருணையே திரண்டு அமைந்தால்போன்ற கண்களையுடையவன்,வெண்கொற்றக் குடையை உடைய அந்த மன்னனவன்.—]

புயறரு மதத்திண் கோட்டுப்
புகர்மலைக் கிறையை யூர்ந்து
மயறரு மவுணர் யாரு
மடிதர வரிவிற் கொண்ட
இயறரு புலமைச் செங்கோன்
மனுமுதல் யாரு மொவ்வாத்
தயரதன் கனக மாடத்
தடமதி லயோத்தி வேந்தன்

[மேகம் போன்ற மதநீர்ப் பெருக்கையும், திண்ணிய தந்தங்களையும், முகத்தில் புள்ளிகளையும் உடைய மலை போன்ற யானைகளுக்குத்தலைவனாகிய பட்டத்துயானையின் மீது ஏறி நடத்தி, மதங்கொண்ட அசுரர்கள் அனைவரும் மடியும்படி கட்டமைந்தவில்லை ஏந்தியவனும், இயற்கையாகிய அறிவையும் செங்கோலையும் உடைய மனுமுதல் எல்லா அரசர்களும் தனக்கு ஒப்பாகமாட்டாதவனுமாகிய தசரதன்என்னும்பேர் உள்ளவன்.அவன் பொன்மயமான மாளிகைகளையும் பெரியமதிலையும்உடைய அயோத்தி நகரத்திற்கு அரசன்]

அன்னவன் சிறுவ னுமிவ்
வாண்டகை யன்னை யேவ
தன்னுடை யுரிமைச் செல்வந்
தம்பிக்குத் தகவி னல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தா
னைமுழு மிராம னென்பா
னின்னெடுஞ் சிலைவ லானுக்
கேவல்செய் யடியன் யானே

[அத்தயரதன் புதல்வனாகிய ஆண்மைக்குணமுடைய இவன், தன் அன்னையானவள் கட்டளை இட்டதால் தனக்கு உரிய செல்வத்தைத் தன்தம்பிக்குப் பெருந்தன்மையோடு கொடுத்து நல்ல பெரிய காட்டை அடைந்தான்.இராமன் என்னும் பேர் உடையவன். நீண்ட வில்லையுடைய இந்த வீரனுக்குக் குற்றேவல் செய்யுந் தொண்டன் நான்—]

என்றவன் றோற்ற மாதி
யிராவண னிழைத்த மாயம்
புன்றொழி லிறுதி யாகப்
புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றுமான் டொழிவு றாம
லுணர்த்தின னுணர்த்தக் கேட்டு
நின்றவக் காலின் மைந்த
னெடிதவன் றடியிற் றாழ்ந்தான்

[என்று அவன் பிறப்புமுதல் இராவணன் செய்த வஞ்சனையுடைய அற்பச் செய்கைவரையிலும் நடந்தவைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் அநுமனுக்கு அப்பொழுது சொன்னான். சொல்லக்கேட்டு நின்ற அந்தவாயுகுமாரன் மிகவும் மகிழ்ந்து இராமன் பாதங்களில் விழுந்து பணிந்தான்.]

இலக்குவன் அநுமனுக்கெடுத்துரைத்த செய்திகள் இந்நான்குபாசுரங்களில் அடங்கியிருக்கின்றன. இவ்வரலாற்றினை வான்மீகிமுனிவர் முதனூலில் பின்வருமாறு கூறுவார்:—

"மகா காந்திமானும் தருமத்தில் அபிமானமுள்ளவருமான தசரதர் என்று ஒரு சக்கிரவர்த்தி யிருந்தார். அவர் தமது நெறியிற்பிறழாது நான்குவருணத்தையும் சேர்ந்த ஜனங்களைச்சதாபாதுகாத்துவந்தார். அவருக்குச்சத்துருக்களேயில்லை.அவரும் ஒருவரிடத்திலும் பகை பாராட்டினதில்லை. அவர் எல்லாப்பிராணிகளுக்கும் வேறொரு பிதாமகன்போன் றிருந்தார்.வேண்டிய அளவு தக்ஷிணைகொடுத்து அவர் அக்கினிஷ்டோமாதி மகாயாகங்களைச் செய்து

முடித்தார். இவர் அவருடைய மூத்தகுமாரரானஇராமர்; உத்தமகுணங்க ளுடையவர்; அரசருக்குரிய லக்ஷணங்கள் யாவும் பொருந்தியவர்; ராஜலக்ஷ்மி விளங்கப் பெற்றவர். இவர் நாட்டைத்துறந்துகாட்டில்வசிப்பதற்கு என்னுடன் இங்கு வந்திருக்கின்றார்; மாலைப்பொழுதில் கதிரோனுடன் செல்லும் அவனது ஒளிபோல இவருடைய பாரியையானசீதை இவரைப் பின்தொடர்ந்துவந்தாள். நான்இவருக்குஇளையவன்; எல்லாமறிந்தவரும் நன்றிமறவாதவருமான இந்த மகானுபாவனுடைய குணாதிசயங்களால் கவரப்பட்டுஇவருக்குக்குற்றேவல்செய்வதே என் விரதமாகக் கொண்டுள்ளேன்.என் பெயர் இலக்ஷ்மணன்.சுகத்திலிருக்கத் தக்கவரும், சர்வபூதங்களுக்கும் நன்மையை நாடுபவருமான இம்மகானுபாவன் பாக்கியத்தை இழந்து வனத்தில் வசித்துவருகையில் அரக்கன்ஒருவன்உருமாறிவந்து இவருடையமனைவியை அபகரித்துச்சென்றான்.அந்தஅரக்கன்இன்னான் என்பதுதெரியாது.இதனால் நாங்கள் கலங்கும்பொழுது, திதியின் குமாரனாகிய தனு என்பவன் சாபத்தால் அரக்கனுருக் கொண்டிருந்தவனைக் கண்டோம். அவன் எங்களைப் பார்த்துச் 'சுக்கிரீவன் என்று ஒருவானரத்தலைவன்இருக்கிறான். அவன் நமது மனைவியைக் கவர்ந்து சென்றவனைக் கண்டறியத் தக்கவன்' என்று சொல்லிவிட்டுத் தேஜோரூபந்தரித்துத் தேவருலகம்சென்றான். இப்பொழுதுஇந்த இராமரும்நானும் சுக்கிரீவனைச்சரணடைந்தவர்களா யிருக்கின்றோம். இவ்வுலகத்துக்கெல்லாம் வேந்தராயிருந்து அநேக தானங்கள் வழங்கிப் புகழ்பெற்றிருந்த இராமர் இப்பொழுது சுக்கிரீவனைத் தனக்குத் தலைவனாக்க விரும்புகின்றனர். அறநெறி வழுவாதவரும் யாவர்க்கும் புகலிடமானவரும் யார்க்கும்புகலிடமான தசரதருடைய குமாரருமாகிய இராமர் இப்பொழுது சுக்கிரீவனுடைய பாதுகாவலைத் தேடி வந்திருக்கின்றனர். சர்வலோகமும் சரணடையத்தக்கவராயும்உண்மையாய்ச் சர்வலோக சரண்ணியராயும் என் குருவாயும் விளங்கும் இராமர் சுக்கிரீவனைச் சரணடைகின்றனர். குடிகளுடைய சந்தோஷத்திற்குக் காரணமாகிய அருளையுடைய இராமர் இப்பொழுது சுக்கிரீவனுடைய பிரசாதத்தை அபேக்ஷிக்கின்றனர். குணங்களால் நிறைந்த மன்னவ ரனைவோர்க்கும் தக்க மரியாதைசெய்து அரசாண்டுவந்த தசரத மகாராஜனுடைய மூத்த குமாரரும் மூவுலகினும் கீர்த்திபெற்றவருமான இராமர் இப்பொழுது வானரேந்திரனாகிய சுக்கிரீவனைச் சரணடைகின்றனர். துக்கத்தால் வருந்தித் தன்பால்வந்து சரணடைகின்ற இராமருக்குச் சுக்கிரீவன் உதவிபுரியவேண்டும்.

'சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கன் யாவனோ அறியேம்'என்று இலக்குவன்கூறிய சூழ்ச்சியாதென விளங்கிற்றில்லை. "ஓ ராகவா, நீரும் இலக்ஷ்மணரும் இல்லாது அகன்றிருந்தசமயத்தில் வெகு பலசாலியாகிய இராவணன்சீதையைத் தூக்கிக்கொண்டோடுவதை நான்பார்த்து, அவளை மீட்பதற்காக இராவணனை எதிர்த்துப்போர்புரிந்து அவனதுஇரதத்தை அழித்துக் குடையை முறித்து அவனைப் பூமியில்வீழ்த்தினேன். அவனுடைய முரிந்த வில் இது. அவனுடைய ஒடிந்த பாணங்கள் இவை. போரில் அழிந்த அவனுடைய தேர் இது. எனது இறக்கைகளின் வேகத்தால் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்த அவனுடைய சாரதி இவன். நான் சிறிது சோர்ந்த சமயம் பார்த்து இராவணன் என் சிறகுகளை வாளால் வெட்டிச் சீதையைத் தூக்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாய்ச் சென்றுவிட்டான்" என்று ஜடாயு செப்பியதையெல்லாம் இவ்விளைய மைந்தன் கேட்டிலனோ, மறந்தனனோ, அல்லது நங்கையைக் கவர்ந்துபோன கொடியோன் யாரென்றுந் தெரிந்ததில்லையே என்னும் நிலைமையால் அநுமன்மனத்தில் பரிவு பின்னும் மிகும்படி, இராவணன் பெயரை மறைத்தனனோ, எங்ஙனம் இயம்பக்கூடும்! அன்றியும், அவ்வான்மீகத்தின்படி, சுக்கிரீவன் இராமனைச் சரண்புகுவதன்முன் இலக்குவன் அவ்விராமனைச் சுக்கிரீவனுக்கு அடைக்கலமாக்க விரைகின்றானாதலாலும், இங்கு இராவணனது பெயர் மறைக்கப்பெற்று நிற்பினும் நிற்கலாம். ஏனெனில்,இராமனோடு நட்புக்கொண்டால் சுக்கிரீவன் இராவணனையேதனக்குப் பகையாகக் கொள்ளவேண்டும் என்பது அறிந்தவுடனே, அஞ்சிநடுங்கி அவ் வானரத்தலைவன் இராமனுக்குத்தஞ்சமளிக்கமறுப்பினும் மறுக்கலாம்என்னுமோர் ஐயத்தினால் இலக்குவன் அவ்வல்லரக்கன்றன் வெருவரு பெயரை விளம்பாமல் தன் மதியின்புணர்ப்பினால் விட்டனன் என்னலும் இவர்இருந்தநிலைமையின் இயற்கையினின்று நெடுந்தூரம் விலகியதாகாது. மற்று எற்றுக்கோ தனதண்ணனை இன்னணம் கொண்டுபோய் நல்ல இத் தம்பி அக் குரக்கினத்தலைவன் கால்களில்கிடத்துகின்றானோ அதுவும்தெரிந்ததில்லை. இராவணனை வென்று சீதையைப்பெறுவதற்குச் சுக்கிரீவன் துணைஇன்றியமையாததென்று மதித்து அத்துணையைப் பெறுதற்கோ இங்ஙனம் எளிமையுற்றுத் தாழ்த்துகின்றான் இவ் விளையோன். கவந்தன் அவ்வாறு எண்ணிச் சில கூறினனென்றால் இலக்குவன் தான் அத் துணை இன்றியமையாததென முற்றிலும் நம்பிவிடலாமா? கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன் தனது அண்ணன் என்பதை வாலி அறிந்திருந்தஅளவு நெடிதுநாள் உடன்பயின்ற இலக்குவனறியாமற்போனது விந்தையே. இலக்குவனுடைய வாக்கு, இன்னவாறெலாம் ஐயுற்றுத் தெளியாமல் கலங்குவதற்கு இடந்தருகின்றதேனும் முதனூலில் இச்செய்தியைச்செப்புகின்ற சுலோகம் ஆழ்ந்ததோர் பொருளைத் தன்னுள் அடக்கிக்கொள்ளாமலிருக்கவில்லை. "ஏஷதத்வாச வித்தாநி ப்ராப்யசாநுத்தமம் யச: லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி" என்றனன் இலக்குவன். லோகநாத: என்ற சப்தம் இராமபிரானது பாத்வத்தையும், சுக்கிரீவனை அவன் நாதனாகக் கொள்ளப்புகுந்தானென்பது தாழ்ந்தவரோடுஇணையாகக்கலந்திருக்கும்அவனது ஸௌசீல்ய குணத்தையுங் காட்டுகின்றன என்பது ஒருபுறமிருக்க, அப் பரமன் இக்குரங்கினைத் தனக்குத் தலைவனாகக் கொள்ளவேண்டியதன் அவசியம் யாது என்பதற்கு விடையாம்படி, லோகநாத: சுக்ரீவம் நாதமிச்சதி, என அமைந்திருக்கின்ற வாசகம் வான்மீக முனிவரது வித்தகத்தின் ஆழத்தை அழகுற அளந்து நிற்கின்றது. ஈசுவரன் இச்சிக்கின்றான் என்பதல்லால் அவன் செய்கைக்கு வேறு ஓர் காரணம் வினவ வேண்டியஅவசியமில்லை. அவன்சித்தம் அதுஅவ்வளவே.அதனைக்கடந்து மேலொன்றுஆராய்வதெல்லாம் அவலமாய் முடியும். பிரபஞ்சமத்தனையும் நடக்குமாறு நடப்பதற்குக் காரணம் யாதெனில், கடவுளின் சித்தம் அவ்வாறு இருக்கின்றது என்பதல்லால் வேறில்லை. அதனோடு நின்றுவிடவேண்டும். பின், கடவுளின் சித்தம் ஏன் அவ்வாறு இருக்கின்றது என்று அதன்

மேல் வினவுதல் ஒருபோதுமாகாது. காரணங் கடந்த பொருள் கடவுளாதலின், அக்கடவுளின்சித்தம் அவ்வாறு இருத்தலுக்குக் காரணம், அவ்வாறு இருத்தலேயாம்; பிறிதொன்றில்லை. இந்தத் தத்துவம் நினைவில் நிற்கவில்லையாயின் நம்முடைய புராண இதிகாசங்களனைத்தும் பொருளும் பயனுமற்றுப் போய்விடும். இதனை மனதில் வைத்தே இராமனது அவதார சரிதையின்ஆரம்பமாகிய அயோத்தியாகாண்டத்தின் ஆரம்பத்திலேயே,

　வானின் றிழிந்து வரம்பிகந்த
　　மாபூ தத்தின் வைப்பெங்கும்
　ஊனு முயிரு முணர்வும்போல்
　　உள்ளும் புறனு முளனென்ப
　கூனுஞ் சிறிய கோத்தாயுங்
　　கொடுமை யிழைப்பக் கோறுறந்து
　கானுங் கடலுங் கடந்திமையோ
　　ரிடுக்கண் காத்த கழல்வேந்தை

எனக் கம்பர்பெருமான் வற்புறுத்துகின்றார். "கூனுஞ் சிறியகோத்தாயும் தனக்கோர் கொடுமை இழைப்பச் செய்தாலன்றி, இமையோர்தம் இடுக்கண்ணைக் காப்பதற்கு அவனுக்கு இயலாதோ" என்று சங்கையுற்று ஆராயாமல், அவன் பஞ்சபூதங்களாலாகிய இப் பிரபஞ்சமெங்கும் உள்ளும்புறனும்உள்ள ஒருதனிக்கடவுளாதலால், அவ்வாறு இச்சித்தான் என்ன ஏற்றுக் கொள்வது ஒன்றுமே யமையும் என்னுங் கருத்தே அச்சாணியாக இராமகதை நடக்கின்றதென்பதை நினைத்தல்வேண்டும்,என்பதுஅச்செய்யுளின் நுண்ணிய குறிப்பாம்.கடவுள்உண்டென்ற நம்பிக்கையைமாத்திரம் தாங்கியிருத்தல் மிகமிகச் சிறிய ஆஸ்திகம். மற்று, நிரந்தரமாய் நிலைத்த ஆஸ்திகம் யாதெனில், "உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் ஆகிய இவ் வலகிலா விளையாட்டை அவர் புரிவதற்கும், அவ்விளையாட்டையும் அவர் நாம் காணுகின்ற இவ்வண்ணம் புரிவதற்கும், அவரது இச்சையே காரணம் என்பதோடு அமைந்து, அதன்மேல்அக்கடவுள் அவ்விச்சையை அவ்வாறுகொள்வதற்குக்காரணம்யாதென வினவாமையேயாம் "ஈசுவரனதுஇச்சை இதுஎன்னும்இந்தஎண்ணமேபோதும் எனக்கு" என்றநம்பிக்கையே ஆஸ்திகத்திலெல்லாம் ஆழ்ந்தஆஸ்திகமாம். இந்தநம்பிக்கைஇல்லாமல், கடவுள் உண்டென்றுரைப்பதெல்லாம்,நாத்திகமே என்னத்தகும். "லோகநாத: சுக்ரீவம் நாதமிச்சதி"—அவ்வளவுகூறினால் அனுமனுக்குப்போதும் என்பதை அறிந்தனன் இலக்குவன். சுக்ரீவனை இராமன் சரணடைந்ததில் வான்மீகமுனிவர் இங்குக்காட்டியஇத்தத்துவத்தைக் கம்பர் ஏன் கூறாமல் விட்டனர் என்னக் குறைகொள்ள வேண்டா. இப்படி இயம்புவதால் தனதருமை இராமனைச் சார்ந்துதோன்றும் சிறுமைக்குச் சாலக் கூசினார்போலும். ஆயினும் அதன் தத்துவத்தைமறந்தவரும் அல்லர், மறுத்தவரும் அல்லர். இதனை இங்குச் சுக்கிரீவன் தாள்களில் இராமனை வீழ்த்திக் காட்ட நாணினாரேனும், வாலியை இராமன் கொன்றதற்கு இராமனது இச்சையே காரணம் அன்றி அவ்விச்சைக்கு வேறோர் காரணம் அமையவேண்டாமையை வற்புறுத்த நிற்கின்றார்—அது பின்னர்.

குரக்கினத்தரசனுக்கு இரகுகுல மேன்மையோனைச்சரணெனச் செப்பலாமோ என்னும் சங்கை இவ்வகை நிகழுங்காலை, மாணியின் வடிவங்கொண்டோனொருவன் தன்னடியிற் றாழ்ந்தது கண்ட இராமன் வியப்புற்று,

　தாழ்தலுந் தகாத செய்த
　　தென்னைநீ தரும மன்றா
　கேள்விநூன் மறைவ லாளா
　　வென்றன னென்னக் கேட்ட
　பாழியந் தடந்தோள் வீர
　　மாருதி பதுமச் செங்கண்
　ஆழியா யடியேன் றானு
　　மரிக்குலத் தொருவ னென்றான்.

[அனுமன்இராமபிரானதுபாதங்களில் விழுந்துபணிதலும், இராமன் அவனை நோக்கி, சுருதி நூல்களில் தேர்ந்த பிராமணனே, தகுதியற்ற இக்காரியத்தை நீ செய்ததென்னை, என்றுகேட்டான். அவ்வாறு கேட்க, அதனைச் செவியுற்ற, வலியமைந்த அழகிய பெரிய தோள்களையுடைய வீரம்வாய்ந்த அனுமான், "தாமரைபோன்றசிவந்த கண்களையும், ஆஜ்ஞாசக்கரத்தையும் உடையவனே, அடியேனும் குரங்குச்சாதியைச்சேர்ந்த ஒருவனே,என்றான்.]

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரது பாதங்களில் வீழ்ந்து பணிந்ததும், குகனுடைய பாதங்களில் பரதன் வீழ்ந்ததும் தக்கதாமோ என்று பிறர் ஆராய்வதென்ன, மாணியாம் தோற்றமுடைய வொருவன் தன்னடி பணிந்து வீழ்ந்ததன் தருமத்தைத் தானே வினவினான் இராமன். ஆயினும், அனுமனோஅதற்கு யாதும் அமைதிகூறப்புகுவதின்றித்தன்னுடையகுலத்தையே கூறி, அதன் உண்மையையுந் தெரியக்காட்டுங் கருத்தினனாய்,

　மின்னுருக் கொண்ட வில்லோர்
　　வியப்புற வேத நன்னூல்
　பின்னுருக் கொண்ட தென்னும்
　　பெருமையாம் பொருளுந் தாழப்
　பொன்னுருக் கொண்ட மேரு
　　புயத்திற்கு முவமை போதா
　தன்னுருக் கொண்டு நின்றான்
　　தருமத்தின் தனிமை தீர்ப்பான்.

[பின், காப்பாரின்றி வருந்திய தருமத்தின் தனிமையைப் போக்கத் தோன்றினவனாகிய அனுமன், மின்னல் போன்ற உருவையுடைய வில்லையேந்திய இராம லக்ஷ்மணர்கள் அதிசயம் அடையும்படியும், நல்ல வேதசாஸ்திரங்களே இவ்வுரு வெடுத்ததோ என்றாலும் அதன் பெருமையும் குறைந்துகாட்டும்படியும், பொன்மயமானவடிவுடையமேருமலை, தன்தோள்களின் அளவிற்குக்கூட உவமையாகாதபடியும், தன்னுடைய நிஜரூபத்தை எடுத்துக் கொண்டு நின்றான்.]

அனுமன் ஒருபோதும் சிறியன சிந்தியானாதலின் அவனெடுத்த உருவத்தின் அளவை,

　கண்டில னுலக மூன்றுங்
　　காலினாற் கடந்து கொண்ட
　புண்டரீ கக்க ணாழிப்
　　புரவலன் பொலங்கொள் சோதி
　குண்டல வதன மென்றாற்
　　கூறலாம் தகைமைத் தொன்றோ
　பண்டைநூல் கதிரோன் சொல்லப்
　　படித்தனன் படிவ மம்மா.

[மூன்று உலகங்களையும் தன் பாதங்களால் அளந்து கொண்ட, தாமரைபோன்ற கண்களையும்சக்ராயுதத்தையும் உடைய இராமபிரான், பொன்னாலாகிய பிரகாசமுடைய குண்டலங்கள் அணிந்த அனுமனது முகத்தைக் காணமாட்டாதவனாயினான், என்றால், பழமையான சாஸ்திரங்களைச் சூரியபகவான் கற்பிக்க அவனிடம் கற்றுக் கொண்ட அனுமனதுவிசுவரூபம்,இப்படிப்பட்டதென்று ஒருவரால் எடுத்துச் சொல்லக்கூடியதொன்றோ]

எனினும்,

　தாட்படாக் கமல மன்ன
　　தடங்கணான் றம்பிக் கம்மா
　கீட்படா நின்ற நீக்கிக்
　　கிளர்படா தாகி யென்றும்
　நாட்படா மறைக ளாலு
　　நவைபடா ஞானத் தாலுங்
　கோட்படாப் பதமே யைய
　　குரக்குருக் கொண்ட தென்றான்.

[தண்டைவிட்டு நீங்காத செந்தாமரை மலர்களைப்போன்ற கண்களையுடைய இராமன், அவ்வுருவத்தைத் தம்பிக்குக் காட்டி, 'ஐயனே, என்ன ஆச்சரியம் இது பார். கீழானவைகளைச் சேராததாகி, ஒருபோதும் அழியாத ஒளியை உடையதாய், கால முதிர்ச்சியால் கெடுதல் இல்லாத வேதங்களாலும், குற்றமற்ற தத்துவ ஞானத்தாலும் அறியப்படாத பரமபதமே ஒரு குரங்கின் வடிவத்தை எடுத்து வந்தது—என்றான்]

வேதத்தின் உருவமே இவ்வனுமனது உருவத்திற்குப் பெருமையிற் பிற்படுமென்றால், அவ்வேதத்தாலுங் காணமாட்டாத பரமபதமே இதனை ஒக்கும் என்பதுஒருவாறு இயற்கையாகலாம்.இவ்வுருவினைக் கண்ட இராமனுக்கு வியப்பொடு உவகையும் பெருகியது.

　நல்லன நிமித்தம் பெற்றே
　　நம்பியைப் பெற்றே நம்பா
　வில்லையே துன்ப மான
　　தின்பமு மெய்திற் றின்னும்
　வில்லினா யிவனைப் போலாங்
　　கவிகுலக் குரிசில் வீரன்
　சொல்லினா லேவச் செய்வா
　　னவனிலை சொல்லற் பாற்றோ.

[மேன்மையுடைய இவ்வனுமன் வாய்க்கப்பெற்றோம், ஆகையால் நல்ல நிமித்தம் பெற்றோம். இனி நமக்குத் துன்பம் இல்லை, இன்பமும் இனிநமக்குவந்தது.மேலும், வில்லை யுடையவனே, இவனைப் போன்ற ஒரு வீரன், குரங்குஇனத்துத் தலைவனாகிய சுக்ரீவனது கட்டளையால் ஏவல்செய்கின்றான் என்றால், அச்சுக்கிரீவனுடைய தன்மை எவ்வாறு இருக்கு மென்று சொல்லக் கூடுமோ] என்றனன். அனுமனும் அக்குரக்கினத் தலைவனை இவ் வீரர்பால் அழைத்து வருவான் [illegible]

அனுமப் படலம் முற்றிற்று.

199162

சூளாமணி

[152-வது பக்கத் தொடர்ச்சி]

வேற்படையையும் மணிமுடியோடு அரசக்குறியாம் ஒரு ஒப்பனைப்பொருள் எனக்கொண்டு, அருள் நிழலிலே உலகைவைத்து ஆள்கின்ற அன்பாட்சியின் முறைப்படி நிகழும் இவனுடைய செயற்கரும் செய்கைகள், அவ்வுள்ளநிலைக்கு ஏற்பவே இம்மண்ணுலகையும் பொன்னுலகையும் கடந்த இன்ப அன்பு உலகத்து அறிவுச் செய்கைகளாதலின் இவற்றைக்காண்பதற்குமுன்னம், உடலையும் பொருளையும் உள்ளத்தையும் உயிரையும், எண்ணூல் அரசநூல் முதலிய நூலின்படியும் தம் உலகியல் அறிவின்படியும் நன்றாகக்கூர்ந்தெண்ணி ஆய்ந்தறிந்து அளந்துகாட்டிய அறிஞர்கள் பண்டைமுறை நடைபழகியிருக்கின்ற தம் மனத்தாலே, இவற்றை எட்டவும் இயலாதபடி உயரவோங்கி உள்ளத்தையும் கடந்துநின்ற கடவுட்செய்கையேபோல விளங்குகின்றன. பயாபதி மன்னனது அரசியல், அண்டி நிற்பாரிடத்தும் அகன்று ஓடினாரிடத்தும் ஒருபடித்தாக விளங்குகின்றது. அருளே, செயல் என்ற ஒரு வடிவு கொண்டபோது ஈதே அதன் பயனும். அரசியலோ காத்தலும் கடிதலும் என்று, பயிர் விளைத்தலும் களை களைதலும்போல, இரண்டாகப் பிரிகின்றது. அருகிலே நின்ற பெண்டு பிள்ளைகள் என அவர்களுக்கு ஒருவழியும் அகல நின்றார்க்குவேறேவழியுமாக முறைபிறழ்வதிங்கில்லை. மகனைத் தேர்க்காலில் உருட்டுமோ ருயர்நிலையையே அரசியலின் நுட்பமென உணர்கின்றான். காலத்தாலும் இடத்தாலும், அன்பாலும் உறவாலும் மற்றும் பல பல வகையாலும் அகன்று நின்றவர்பாலும் அன்புநெறியே செலுத்தி ஆள்கின்றான். வேற்றார் சென்றவன் செல்வம் ஆளில்லாப் பொருளாய் அழிவது அந்நாட்டில் இல்லை. படைக்கு எட்டிய இடத்தும் படைக் கெட்டா இடத்தும் இவனது அன்பாட்சி செல்லுதலின் தீமை எண்ணினாரும் கழிந்ததற் கிரங்கித் தம்மைத்தாமே ஒறுத்துக்கொள்வதே அங்குக்காணும் முறையாதலின் அகலச் சென்றாரும் தந்நெஞ்சமே தம்மைச் சுடக் கழுவாய் ஆற்றி நல்வழி திரும்புகின்றனர். அன்பாட்சியின் பயனாக அவர்மனம் மாறியபடி யது. உலகையே நீப்பினும் அவ்வுள்ளநிலை மாறுவ தில்லையன்றோ? மறுமையினும் சென்று நடத்தும் அரசாட்சியாவது ஈதேயன்றோ! நாட்டையகன்றவர் எனப்பொருள் கொள்ளின் உலகனைத்தும் தன்நிழற்கீழ்த் தங்குதலின் "அகன்றவர்' என்னும் சொல் மறுமை சென்றாரை யன்றி வேறு எவரைக் குறித்தல் கூடும்? உள்ளத்தை மாற்றும் நிலை ஈதானால் பகை நட்பு என்ற பிரிவே இல்லையோ? இல்லை என்பது உலகியல் கூறியதாய் முடியாது. இராமனெனும் ஓர் இன்பக் கனிபழுத்த அருள்வடிவானதயரதனாரது மடியின்மீதே வளர்ந்து அவரோடு ஒன்றுபட்டு அவரது தோளிற்படர்ந்த கைகேயி என்னும்பெண்கொடியும் அந்தக்கனியைக் காட்டிலே காயவைக்க முந்தியதன்றோ (தேவி சிந்தையும் திரிந்ததன்றோ).தந்நெஞ்சு தம்மைச்சுட அவன் அருள்நெறியே நடந்தாலும் தம்மையுமறியாதே நட்பும் பகையும் பாராட்டிநிற்குமக்கள் இல்லாமல்இல்லை. கோடை வெயிலில் பாலைவனத்தே பரல்மீதே செல்வார் இளமரக்காவின் தண்ணறு நிழலையும் அந்நிழற் கீழே ஊற்றிலெழுந்த தண்ணீரையுங்கண்டு வேட்கைதீரக் குடித்து உடலு முள்ளமும் உயிரும் குளிர்ந்தாற் போல இவனுக்கு நட்புரிமைபாராட்டுகின்றார்.அன்னவர் இவனுடையசெயல்களைக்கண்டுஉடலும் உயிரும் உள்ளமுங் குளிர்ந்து வாழ்த்தும்படி தண்ணென்று விளங்குகின்

ருன். அந்தப் பாலைவனத்து வழியே செல்வார் தீயை மிதித்துச் சுற்றும் தீயே பரத்தலால் உடல்வெந்து மேலும் நடுப்பகலில் வான்நடுவே வந்து கதிரவனும் வெப்பத்தைக் கொட்டுவது கண்டு மனமும் வெந்து வருந்துவதே போலப் பகைகொண்டார்க்கு இவன் சுடுபொருளாய் விளங்குகின்றான். அரசனுடைய இயல்பு மாறுபடுவதால் இவ்வேறுபாடு விளைகின்றதில்லை. பசியோடும் விருந்து தின்பான் ஒருவன் அந்நாளை நன்னாள் என வாழ்த்துகின்றான்; விருந்தெதிருந்தும் வயிற்றுநோவால் உண்ணாது வருந்துவான் அந்நாளையே தீநாள் எனப் பழிக்கின்றான். அந்த நாளேபோல அரசனும் விளங்குகின்றான். ஆதலின் பகைவரை நோவதின்றி அரசனை நோவதால் பயன் இல்லை என்றபடி. நற்பயனூட்டும் நாளைக்காட்டினும் நண்பர்க்கு இனியனாகிறான் இவ்வரசன்: தீப்பயனூட்டும் நாளைக்காட்டினும் தீயனாகின்றான் தெவ்வராய் நின்றார்க்கு. எனினும் இவனே, அவ்விருதிறத்தார்க்கும் ஒருபடித்தாகவேநடுநிலைநின்று அருள்வடிவாக விளங்குகின்றான். ஆயினும், இவ்வரசன் தன் பகைவரைப்படைகொண்டு தலையை நொறுக்குகின்றானே, என்னின் இல்லை. அழகு வடிவமாகவே தன் படைகளை அமைத்து அவ்வன் ஒழுங்கில் நிலைபெற்று விளங்குகின்றான். அந்தானை மன்னன் நந்தானை மன்னனு மாதலின் இரட்டுறமொழிதலாம். நாமும் அன்புலகில் வாழும்படி நல்வழியமைத்துச் சென்ற அவ்வரசன் ஒருவகையில் நம் மன்னனும் ஆகின்றானன்றோ? அகன்றவரும் பகைவரும் ஆகி இருப்பவர் ஒருக்கால் உள்ளே ஊழ்வினையின் பயனாக அரசனை வெறுப்பினும், தந்நெஞ்சே தம்மைச் சுடுதலின் தம் எண்ணம் செயல்வடிவு அடைதல் இல்லையாகையால் தம் எண்ணத்திற்கும் நாணுவாராய்த் தம்மை அவன்மேல் வைத்துத் தம்மைப் பகைப்பார் அவனைப் பகைப்பாராய் நிற்கின்றனரேயன்றித் தீயவழிசெல்கின்றில ராதலின் அவர்களையும் அவன் படை ஒறுக்கின்றதில்லை. அவ்வரசன் தான் நெறிபிழைத்தபோது தானே தன்னுயிர் தன் கோலின் வளைவைத் தீர்த்து நிமிர்த்திச் செல்லாதாயின் வேல்கொண்டு குத்தி மாய்வதேபொருள் எனக் கைபிடித்த வேற்படையைக் கண்ட மக்கள் "நாம் மறந்தேனும்வழிதவறிநடப்போமாயின் அரசனுக்கு அங்ஙனம் மறலி யாய்விடுவேமோ" என்று எண்ணி, அழகுக்கெனப் பிடித்த அவ்வேலையும் கண்டு அஞ்சும்படி அவ்வரசன் தன்னுயிரையும் மக்களுயிரையும் ஒன்றுபடுத்தி அவர்களுடைய தலைவனாய் உலகத்தைக் காக்கின்ற நாளில், ஒளியோடு மாலையும் சூடிய வேலேந்திய மறவர்களுடைய நெருப்பெனக் கொதித்து உயிர்பாய்ந்து கொல்லும் படைகள் சிறிதும் மக்களை வருத்துகின்றதில்லை. ஒறுத்தல்நெறியே முறைசெய்வதற்குத் தீங்குசெய்வாரோ அங்கில்லை. கரையின்றிநிற்கும்கருங்கடல்தன்னைக்கண்டோர்க்கு, இயற்கைப் பரப்பின் தகுதியமைப்பை நினைப்பூட்டி இயற்கைவழி ஒழுகாவிடின் கடலே பொங்கித் தன்னெல்லைக் குட்பட்ட நிலத்தை யழிக்கும் எனத் தன் பரப்பாலும் ஒலியாலும் அச்சுறுத்தி நிற்கின்றதாகலின் அதனைக் கண்டுணர்ந்த மக்கள் இயற்கையழகு சிதறுண்பதற்கு அஞ்சுவாராய் நன்னெறியே ஒழுகுகின்றாராதலின் படைவந்து வருத்துவது எங்ஙனம் கூடும். ஆனல் அந்நாட்டில் ஒரு படைமட்டும் என்றும் இயங்குகிறது. அதைத் தடுப்பாரில்லை, அந்நாட்டினரின் உள்ளத்தையே கவர்ந்த கணை யது. காமவேளின் கணையே இடையீடின்றி அங்கே உலவுகின்றது. அன்போடு மின்பம் துய்ப்பவரே யன்றித் துன்புற்றுமாழ்குகின்றோர் அங்கில்லை.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தான் என்றாங் கைம்புலத்தாறோம்பல் தலையாவதுபோல், இவ்வாறோம்புதலை நிலைக்கச்செய்து உலகைக் காக்கும் அரசனுக்கு ஆறிலொன்று கொடுப்பதும் அறமே என்று ஆராய்ந்து உறுதியாய் எண்ணிய மக்கள், இவனுடைய படையை அஞ்சியோ, நட்பினை நச்சியோ, கொடாது, உலகனைத்தும் வாழத் தமக்கொரு கேடில்லை என்பதையுணர்ந் தெவ்வுயிரும் இறைவன் திருவுருவமென் றெவ்வுயிர்க்கும் அன்பாயிருப்பாரைப் போல உலகினர்மாட்டும் அவர்கள் வடிவாய் நின்ற அரசன் மாட்டும் வைத்த அருளாலே ஆறிலொரு கடமையைக் கொடுத்துதவுகின்றனர். குடிகள் அருள் செய்யும் நிலையில் நிற்க இவ்வரசன் அவர் வழிநின்று அரசாண்ட தன்மை ஈது. அவ்வாறு பெறுவது கொண்டு உலகை நடத்துவதல்லது, அவன் எவரையேனும் வற்புறுத்தியோ துன்பூட்டியோ பொருள் கொள்வதில்லை. தன் கட்டளை நிறைவேறியதென்று மனமகிழ்வதன்றி வேறொன்று கருதி மனமகிழ அங்கு இடமில்லையாதலின் அம்மகிழ்ச்சியை வேண்டி நிற்கின்றிலன் இவ்வரசன். (இவ்விரண் டடியையும் இரட்டுறமொழிந்துகொள்க). தான்பெற்ற ஆறிலொருகடமையையும், அம்மக்களுக்கே மறுபடியும் அரசியல் வழியில் ஈதே அறமென அவர்கள்மாட்டு வைத்த அருளால் அவர்கள் நிலையை உயர்த்தி அவர்களுக்கு உதவிசெய்வதல்லாது அவர்களிடமிருந்து ஆறிலொன்றாகவேனும் அன்னார்க்குப் பொருட்குறைபாடு தோன்றப் பெற்றதுகொண்டு தன்வாழ்க்கைநடத்தி இன்புறுகின்றதில்லை. தான் வாழத் தன்பொருளும் தன் கையுமே பயன்படுகின்றன என்றபடி நண்ணி நின்றோரும் அகலநின்றோரும் அரசியல்வழியில் தாமேவந்து அருளினராய் அருள் பெற்றபடி ஈது ஆகும். ஊழ்வினைப் பயனால் இவனைக்கண்டு மனம்வெம்பி நின்றும் செயலளவில் மாறுபடுதற்கு இடமில்லையேனும் மனத்தால் மாறுபட்டு நின்ற பகைவர்களும் தாமே இவ் வருள் வழி நடந்து பகைநிலையையும் நட்புநிலையும் கடந்த அவ்வரசனது அன்புநிலை யெதிரே நட்பாயினரைப் போலவே மனமகிழ்ச்சியோடு, தண்ணறு நிழல்பெற்றாரைப்போல இவனடியில் வணங்குகின்றனர். இத்துணைக்கும் இவனுடைய அன்புநிலையும் அவர்கள் மனமுமேகருவியாய்நிற்கின்றனவேயன்றி, அவர்களைவணக்க அன்னார்மேலே இவன் படையெடுத்துச் சென்று அவர்களைச் சேர்ந்தார் மேலோ, அவர்மேலோ வாளை ஓச்சுகின்றதேயில்லை. படையெடுப்பதற்கு முன்னரே அஞ்சிவந் தாட்பட்டனர் அவர் என்போம். எனின் அவன் சீறிநிற்பதே யில்லையாதலின் உவகையும் நகையும் கொண்டே அவர்களை அன்புருவாக உருகச்செய்துநெகிழ்வித்துப் "பணியுமாம் என்றும்பெருமை" என்பதனை அறிவுறுத்துகின்றான் என்க. இவ்வாறு முதலில் பகைவரும் நடுநடுவே நிற்க விளங்கிய அரசியல் முதிர்ந்த நிலையில் இருவினையொப்பில் இன்பமேயூட்டும் நாளேபோல் பகை என்பதின்றி இன்பஅன்பேயாகி விளங்கி இசைப்பொருந்த முறுகின்றது.

மதுரைக் கோவை

[167-வது பக்கத் தொடர்ச்சி]

XII. பகற்குறி.

பகற்குறியிடங் கூறல்

மால்விரிக் கும்புக ழார்மது ரேசர்
வடித்ததமிழ்
நூல்விரிக் குஞ்செம்மல் யாம்விளை யாடிட
நொந்துவளை
சூல்விரிக் குந்தர ளக்குவை தோறுஞ்
சொரியுநிலாக்
கால்விரிக் கும்பக லேவண்ட ருமலர்க்
காவகமே. 161.

குறியிடத்துக்கொண்டு சேறல்

சுனைபார்த்த நீலமுஞ் செங்கழு நீருஞ்
சொருகிமுல்லை
நனைபார்த் துதறு நறுங்குழ லா[ய்]மட
நாரைநந்தின்
சினைபார்க்கும் வாவித் திருவால வாயர்
சிலம்பில்வண்டல்
மனைபார்த் திழைக்கவு நீர்விளை யாடவும்
வந்தருளே. 162.

குறியிடத்துய்த்து நீங்கல்

யாய்க்கோலங் கொண்டழும் புல்வா யிளங்கன் றின்
யாய்ப்புலியூர்த்
தீக்கோல மேனித் திருவால வாயர்
சிலம்பின்மின்னே
சாய்க்கோல வல்லிக்கு நீமணக் கோலந்
தரித்திருநான்
போய்க்கோல நாண்மலர் கொய்திங்ங னேவரும்
போதளவே. 163.

இடத்துய்த்து நீங்குந் தோழி தலைவனொடு கூறல்

எறிக்கும் படையண்ண லேவிடுப் பாய்விரைந்
தெங்களை நீ
குறிக்குங் குறிவழி வந்தன மியாஞ்சொக்கர்
கூடல்வெற்பி
னெறிக்குங் கருங்குழல் வண்டலம் பாவையை
நீர்முகந்து
தெறிக்குந் திவலை கொடுத்தழி யாமுன்னஞ்
செல்வதற்கே. 164.

பகற்குறி யெதிர்ப்பாடு

தேமென் குதலைத் திருவே யுமைப்பெற்ற
தெண்டிரையிப்
பூமென் றழையிவர் பொங்கர்மற் றோவன்பு
பூண்டடிமை
யாமென் பவர்க்குள வாரால வாய
ரணிசிலம்பி
னாமென் பரிபுரத் தாமரை நோவ
நடந்தனமே. 165.

கலந்துழி மகிழ்தல்

கவட்டா யிரம்பொங்கர் சூழ்கடம் பாடவிக்
காவலர்விற்
குவட்டாட கப்பொருப் பார்சொக்க நாயகர்
கூடல்வெற்பின்
றெவிட்டா வமுதத் திருவனை யார்முலைச்
செப்பிணையின்
கவட்டா நிறையத் தவஞ்செய்த வாவென்
றணைப்புயமே. 166.

நலம் பாராட்டல்

மயல்புக்க நெஞ்சக் கயல்புக்க வாளு
மதுரைப்பிரா
னியல்புக்க வெற்பி லெதிர்ப்பட்ட நாளென்னை
யீடழிக்குஞ்
செயல்புக்க கண்ணி யளகா டவிகண்டு
தேம்பிநெடும்
புயல்புக் கொளித்த துயர்சக்ர வாளப்
பொருப்பெங்குமே. 167.

ஆயத் துய்த்தல்

மஞ்சுக் கிணங்கும் பொழில்மது ரேசர்
வரைபுகுது
மஞ்சொற் குதலை யயில்விழி யீரமை
யாளவந்த
பஞ்சுக் கிணங்கு மடிக்கே கிடந்து
பரதவிக்கு
நெஞ்சுக் கொருநிலை சொல்லியல் லோயின்று
நீர்செல்வதே. 168.

மறைந்தவற் காண்டல்

விரிந்திருக் காய்நின்ற வெள்ளிமன் றாளர்பொன்
வெற்பிலெம்மைப்
பிரிந்திருப் பாரையும் போலிங்ங னேமுகம்
பின்புரிந்து
புரிந்திருப் பாருமிப் பொழ்றேறு மின்னமிப்
பூம்புனமத்
தெரிந்தொரு கால்வரு மோதெரி யாதுமுன்
செய்தவமே. 169.

தோழி கையுறை காட்டல்

மகம்பார்த் தயரும் வலாரிபொற் காமலர்
மாலையிதென்
முகம்பார்த்து வாங்கி முடித்தருள் வாய்முடி
மாறனுமாய்ச்
செகம்பார்த்த நீதித் திருவால வாயர்
சிலம்பிடையஞ்
சுகம்பார்க்கு மின்சொ[ன]ல் லாய்புறந் தாழுஞ்
சுரிகுழற்கே. 170.

விருந்து விலக்கல்

திரைப்பால் வளைமூக் கெறிந்த நிலாமுத்தஞ்
சிந்தியிரு
கரைப்பாயும் வையையந் தண்டுறை யார்கடம்
பாடவிச்செம்
மரைப்பாலுந் தேனும் பசுந்தினை மாவு
மகிழ்ந்துதழைப்
புரைப்பா னுகர்ந்தண்ண லேதங்கி யேகுன
பொன்னகர்க்கே. 171.

விருந்திறை விரும்பல்

பெருந்தாரை நெஞ்சன் றி யன்புசெய் வார்பிற
விப்பிணிக்கு
மருந்தா கியமது ரைப்பெரு மாள்செம்பொன்
மால்வரையிற்
பொருந்தாரை வேற்கணல் லீர்கொடிப் பிரேனிற்
புக்கிருந்தஞ்
சுருந்தா தவருமுன் டோவுங்கள் மாளிகை
யாரமுதே.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[169-வது பக்கத் தொடர்ச்சி]

7. கந்தன் சரிதையின் இதோபதேசம்

கந்தன் சரிதையைக் கேட்போர்க்கு வாய்க்கும் பயனைக் கந்தபுராணப் பாயிரப் படலத்தில் காணலாம். உலகத்தின் தற்காலநிலை எவ்வாறு இருக்கின்றதெனில், உலோகாயத வழியே நிற்பது தொழிலாயிருக்கின்றது. பல சமயவாதிகளும் தத்தம் மதங்களை நிறுவித் தமது தெய்வத்தையே சிறந்த தெய்வமெனக் கூறித் தமது மார்க்கமே சன்மார்க்கமெனப் பேசுமொரு வெளிவேடந்தாங்கிப் போதிக்கின்றனரேயன்றி, தம் மதத்தையும் உண்மையில் சம்மதித்து அநுஷ்டிக்காது, தேகத்தைப் போஷிப்பதற்கும், தமது கைப்பொருளையும் சக்தியையும் வளர்ப்பதற்கும், உலக ஆட்சியில் எவ்வளவு உயரச்செல்ல முடியுமே அவ்வளவு செல்லவே அவர் நன்மார்க்கத்திலும், களவிலும், துன்மார்க்கத்திலும் முயல்வதைக்காண்கின்றோமன்றோ? எத்துணைப் பாதிரிமார் தாம் போதிப்பதை அநுஷ்டிக்கின்றனர், எத்துணை திருநீற்றுத் திருமேனியர் உண்மையிற் சைவர், எத்துணை நாமதாரிகள் உண்மையில் வைணவர், எத்துணைப்பௌத்தர் ஜைநியர், "அஹிம்ஸா பரமோதர்மா" என்னும் ஒழுக்கத்தினைக்கைப்பற்றினவரென்று நாம் ஆராயப்புகுந்தால், அவ்வச்சமயத்தாரில் வேடதாரிகளல்லாதார் ஆயிரத்தில் ஒருவர் காண்பதரிது. "தேகமே ஆன்மா போகமே முத்தி" யென்பதை இவர்கள் வெளியில் கூறாமல், மற்று,நடவடிக்கையிலோ இம்மியும் பிறழாமல் இயற்றுவோர்களே யாம்.

"காமமோ டுவகையுங் களிப்பு நல்கலால்
வாமமே பொருளென மதிக்கின்றார் சிலர்"*
—கந்தபுராணம் - பாயிரப் படலம். 24.

அவ்வாறு கூறுவிடினும், வேதநூலுணர்ந்தோரும், அந்நூல் ஏட்டுச் சுரை கறிக்கு உதவாதென நீக்கித் தம் மனம்போனவாறு செய்வார், எத்துணை மக்களுளர்! இவை யாவும் இவ்வாறிருக்கத் தந்திர வழியில் நீதிபோதிக்கும் இதோபதேசம் கந்தன் சரிதையில் ஆங்காங்கு விரவியிருப்பதை நாம்வெளிப்படையாகக் காணுவிடினும், குறிப்பில் காட்டப்பட்ட சிலவற்றை இங்கு நாடுவோம்:—

கந்தன் சரிதையின் இதோபதேசங்கள் சிலவற்றை முறையே அப்பர் தேவார வாயிலாயும் காணலாம். அவைகளைத் திருநாவுக்கரசு வெளிப்படையாகக் காட்டாமல் தோத்திரவாயிலாய்க் காட்டினர்.

பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் றன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியாயெல்லார்க்குமருள்செய்வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே
—திருவாலவாய் - திருத்தாண்டகம். 9

உலத்திலுள்ள பாவங்களையெல்லாம் பகைச்சுடராய்ப் பரமன் அறுக்கின்றானாயினும், அவன் காரியம் அறியொணாததாய்த் தேவாதி தேவர்களையும் திகைக்கச் செய்கின்றது. தக்கன் மகளென்னும் பெயர் தனக்கு நீங்கவேண்டுமென்னும்கருத்தால், மலையரையன் ஒரு மகளாய்ப் பிறந்த பார்வதிதேவியாரை மணக்குமுன்னர், சனகாதி நால்வருக்கு மோனமுத்திரையால் கல்லாலின்கீழ்த் தக்ஷிணாமூர்த்தியான கோலங்கொண்டு மௌனத்துடன் கண்மூடியிருந்த அந்தக்கணத்திலே, தேவாதிதேவர்கள் சிவபெருமான் கருத்தையறியாது காமனை ஏவியதும் அவனை நெற்றிக்கண்ணால் சுட்டதும் நோக்கின் இவரைத் "திகைச்சுடர்" என்றழைத்தல் பொருத்தமன்றோ?

பாதித்தன் திருவுருவிற் பெண்கோண் டானைப்
பண்டொருகால் தசமுகனை யழுவித் தானை
வாதித்துத் தடமலரோன் சிரங்கொண் டானை
வன்கருப்புச் சிலைக்காம னுடலட் டானைச்
சோதிச்சந் திரன்மேனி மறுச்செய் தானைச்
சுடரங்கி தேவனையோர் கைக்கொண் டானை
ஆதித்தன் பற்கொண்ட வம்மான் றன்னை
யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே.
—திருவாரூர் - திருத்தாண்டகம் - 1.

இவ்வாறு தக்கன் சரித்திர சம்பந்தங்கள் காணப்படுகின்றன. "பாதித்தன் திருவுருவிற் பெண்கொண்டது" பார்வதிதேவியார் திருமணமாகும். இதுதெய்வப்புணர்ச்சியாகியஉள்ளப்புணர்ச்சியின் உச்சநிலையாம். ஆயினும்,முருகக்கடவுள் திருவவதார நிமித்தம்உமாதேவியாரைத் தீவேட்டலாகிய திருமணஞ் செய்த கருத்தையும், அதற்குமுன்னர்க்கல்லாலின்கீழ்ச் சனகாதியருக்குப் போதந் தந்த கருத்தையும், மணிவாசகப்பெருமான் தமது திருச்சாழலில் வெகுஅழகாக விளக்கும் பின்வரும் பாக்களைக் காண்க.

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கினையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ!
அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ!
—திருச்சாழல் - 20.

மலையரையன் பொற்பாவை
வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டா
னென்னுமது வென்னேடீ!
உலகறியத் தீவேளா
தொழிந்தனனே னுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங்
கலங்கிடுங்காண் சாழலோ.
—ஷை - 13.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ!

*காலமுங் கருமமுங் கடந்த தோர்பொருண்
மூலமுண் டோவென மொழிகின் றார்சிலர்
மேலுமுண் டோசில விளம்ப விஞ்சையின்
பாலுறு முணர்ச்சியே பரமென் பார்சிலர்
—கந்தபுராணம் - பாயிரப்படலம் - 22.

பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ!
—ஷை - 9

உலகவியற்கை யாதெனத் தெரியாதசனகாதியர்க்கு நான்மறைப்பொருளைஉரைத்ததும்,மலைமகளைத்தான் பின்னர் மணந்ததும், சிவபெருமாள் இயற்கையின் இருமுகங்களாம். திவ்யசிற்றம்பலவன் பெண்பாகம் கொள்ளாவிடில், யாவரும் யோகமார்க்க மெய்துவர். அதனால் உலகத்தின் அழிவு உண்டாகுமென்பது விளங்கும். ஆயினும் அவன் பிரமசாரி; அவளே கன்னி யாவாள்.

சொப்பனத்திலன்றோ சுகம்

வடக்கே வெகுதூரத்திற் கப்பால் வனசமுகி என்னும் ஆற்றினால் அலங்கரிக்கப்பட்டது அச்சாந்தி தேசம் மாகாந்தி என்னும் மன்னவன் ஒரு காலத்தில் அத்தேசத்திற்கு அரசனாயிருந்தான். கல்வி கேள்வி அறிவு ஆற்றல் செல்வம்முதலிய எல்லா நலங்களும் நிறைந்தவன் அவ்வேந்தன்; அந்த நாடும் வளப்பம் மிகுந்தநாடு.

ஆயினும்,மாகாந்தி மன்னன் எப்பொழுதும் கலங்கிவருந்திய மனமுடையவனாகவே இருந்தான்.அயல் தேசத்துஅரசர்களெல்லாரும் அச்சாந்தி தேசத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையால் மாகாந்தி மன்னனுடன் போர் செய்துகொண்டிருந்தனர். இதனால் இம்மன்னன் தன்நாட்டை இழக்காமற் காப்பதற்கு ஓயாத இன்னல் உழப்பவனாயினான்.

அன்னவன் ஒருநாள் தன் மந்திரியாகிய சுபத்திரனை யழைத்து, "அமைச்சா, என் செய்வேன். எல்லாம் இருந்தும் எனக்குச் சுகம் என்பது இல்லையே. பகைவர் பயம் தீர்ந்தால் அப்புறம் நான் முற்றிலும் சுகப்பட்டவனாவேன்,அதற்கொருவழிசொல்"என்றனன்.

இதனைக் கேட்ட சுபத்திரன் யாதும் சிந்தியாமல், "அரசனே, அதற் கப்புறமும் இல்லை சுகம். உனது நாட்டைக் காக்கும்பொருட்டுப் பகைவரை வெல்ல வேண்டியது உன் கடன் என்ற எண்ணத்தால் அவர்களை எதிர்ப்பதே அறிவு. அந்த எண்ணத்தை விட்டு அவ்வெற்றியால் நீ ஒரு சுகம் பெறவேண்டு மென்று ஆசைப்படுவாயானால் பிறகு முன்னினும் அதிகம்வஞ்சிக்கப்பட்டவனாவாய்" என்றான்.

"பகைவரை வென்றபின் என்சுகம் பெருகுவதற்கு என்ன தடையிருக்கின்றது! பகைவரை வேரற வெல்வதற்கு உன்னை ஒரு வழிகேட்க அழைத்தேனேயொழிய, தத்துவோபதேசங்கள் ஒன்றும் இப்பொழுது எனக்குவேண்டா. கல்விகேள்விகளில் நான் உனக்குக் குறைந்தவன் அல்லன் என்பதை நினை" என்றனன் மன்னவன்.

'ஆயினும் அக் கல்வி கேள்விகளால் அடையவேண்டிய மெய்ப்பயனில் மிகவும் குறைந்தவனாக இருக்கின்றான் இம்மன்னவன்' என்று தன் மனத்தே எண்ணிக்கொண்டு அம்மந்திரி அரசனைநோக்கி, "அரசே, ஆயின், அதற்கு வேண்டியன செய்வோம்" எனக்கூறிப் பகைவரையெல்லாம் ஒடுக்கக்கூடிய தக்க உபாயங்களைச் சூழ்ந்து சொல்லினான்.

வருடங்கள் இரண்டு கடந்தன. மாகாந்தி மன்னனுக்குப் பகைவர் ஒருவரும் இல்லாமல் அழிந்தனர். ஆயினும் அவன் முகத்தில் கவலையே நிலவியது. ஒருநாள் தன்மந்திரி சுபத்திரனை வரவழைத்தான். அழைத்து."அமைச்சா, நீ முன்சொன்னது ஒருவாறுஉண்மையே. எல்லாம் இருந்தும் எனக்குச் சுகமென்பது இல்லையே. பகைவர்பயம் தீர்ந்தது. ஆனாலும், நீதியுந் தருமமும் தகைமையும் தவறாமல் இந்தத் தேசத்தைக் காக்கவேண்டுமே என்னும் அச்சம் எப்பொழுதும்என்னை அழுத்திக்கொண்டேயிருக்கின்றது. அதுவுமன்றி, என் தேயமும் நானும் உலகமக்களும் இருக்கவேண்டியஉன்னதநிலை இன்னதென்று நன்றாக அறிந்திருக்கின்றேன். அந்த நிலையை எட்டவொட்டாமல் தடுக்கின்ற இடையூறுகளோ எண்ணிறந்தன. ஆயினும் அவ்விடையூறுகளைக்கடப்பதற்கு வழியொன்று இல்லாமற் போகாது. அதனைக் [illegible] என் எண்ணம் கைகூடி நான்சுகப்படவேண்டும்; இதற்கு என்ன செய்வது," என்று கேட்டான்.

மந்திரியும், "இதற்கு என்ன செய்வது" என்று தானுங் கேட்டானேயன்றி வேறொன்றுஞ் சொல்லவில்லை. அதன்மேல் அரசன் சிறிதளவு சிந்தித்து, "கல்வியினால் எனது அறிவு கூர்மையடைந்திருப்பதனால் விளைகின்ற சஞ்சலம் இது. அவ்வறிவினின்று பிறந்த எண்ணங்களை எல்லாம்மறந்து வாழவல்ல வழிகளைச் செய்துகொள்வேன். அப்புறம் நான் முற்றிலும் சுகப்பட்டவனாவேன். இப்படி என்னுடையஎண்ணங்களை மறப்பதற்குரிய வழிகளை நானே தேடிக்கொள்ள வல்லவனாகையால், உன்னைக் கேட்கவேண்டியதில்லை; நீ போகலாம்" என்றனன்.

"அரசே, அதற்கப்புறமும் சுகம் இல்லை" என்று சொல்லிக்கொண்டே மந்திரியும் அகன்றான்.

அந்நாள்தொட்டு அரண்மனைமுழுவதும் மதுவும் மாதரும்சூதுமாயிருந்தது.ஒரு கையில் மதுவள்ளம், மறுகையில் சூது, பகலோடு இரவெல்லாம் மகளிர் கூட்டம்; இப்படியே அவ்வரசனுக்கு வருடங்கள் இரண்டு கழிந்தன.

பிறகு ஒருநாள் மாகாந்தி மன்னவன், தன் மந்திரி சுபத்திரனை வரவழைத்து, "மந்திரி, என்செய்வேன், நீ முன்சொன்னது ஒருவாறு உண்மையே. எல்லாம் இருந்தும் எல்லாம் செய்தும் எனக்குச் சுகமென்பதுஇல்லையே. நான் எந்த உண்மையான சுகம்வேண்டும் என்று விரும்பி, அதனை எட்டமாட்டாமையால் அவ்வெண்ணங்களை மறப்பதற்காகச் சிற்றின்பங்களில் முழுகினேனோ அந்த எண்ணங்களையே மீண்டும் மீண்டும் இச்சிற்றின்பங்கள் பின்னும் வலிமையோடு நினைப்பூட்டித் தருகின்றன. நான் அடையவேண்டிய உன்னதநிலையின் சுகம் தெரிந்திருக்க, அதற்குமாறாகக் கிடந்துழல்கின்ற இச்சிற்றின்பங்களை நினைக்கும்போது, என்னுடைய சஞ்சலம் அதிகமேயாகின்றது. இதற்கு என்ன செய்வது" என்று ஏங்கினான்.

மந்திரியும், "இதற்குந்தான் என்ன செய்வது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அல்லலுற்ற மனத்தினால் அலைப்புண்டான் அரசன். இன்னவாறு இரண்டு வருடங்கள் கழிந்தன.

பிறகு ஒருநாள் காலையில் அரசன்படுக்கையைவிட்டெழுந்தபோது, தன் மனத்திருந்த ஏதோ ஒரு பெரிய பாரம் நீங்கியது போன்ற ஓர் உணர்ச்சி அவனுக்குத் தோன்றியது. கண்ணாடியருகில் சென்று தனது உருவத்தை நோக்கினான்; தன் கண்களும் முகமுந் தெளிந்திருக்கக் கண்டான்.இதற்குக் காரணம் என்னவென்று முதலில் அவனுக்கு விளங்கவில்லை. சிறிது நேரம் சிந்தித்தான். "நன்று" என்றனன்; தன் மந்திரி சுபத்திரனை மிக விரைந்துவர அழைத்தனன். வந்த மந்திரி, "அரசே, சஞ்சல மின்றி உன்முகம் இன்று தெளிந்திருப்பதற்குக் காரணம் என்ன; நீ வேண்டிய சுகம் வாய்த்துவிட்டதோ" என்று வினவினான்.

"சுகத்தை அடையக்கூடிய வழி வாய்த்தது; மிகவும் எளியது. எனக்குத்தான் இதுவரையில் அது தோன்றவில்லை என்றால், அறிவிற்சிறந்த உனக்குமா அது தோன்றாமற்போயிற்று; அல்லது,நல்லவென் மந்திரி, அதனை எனக்குச் சொல்லலோ ஆகாது என்று இருந்தாயோ, நேற்றிரவு கண்டவொரு கனவினாலன்றோ சுகம் என்பது எங்கேஇருக்கின்றது என்னும் இரகசியம் எனக்குத் தெரியவந்தது" என்றான் அரசன்.

"அந்தக் கனவுதான் என்னவோ" என்று கேட்டான் மந்திரி.

"வேறொன்றுமில்லை. நான் ஓர் பிச்சைக்காரனாக இருந்ததாக நேற்றிரவு கனவு கண்டேன். எவ்வளவு நேரம் அந்தக்கனவு நிகழ்ந்ததோ நினைவில்லை. ஆயினும், இத்தனைகாலம் அரசுசெய்திருந்தும் ஒருபோதும் சுகப்படாத நான், கனவிலே பிச்சைக்காரனாக இருந்த காலம் எத்தனையே அத்தனையே சுகப்பட்டேன். அரசின்பாரமில்லை, அறிவின் கவலையில்லை. ஆகையால், மந்திரி, இதுகேள், நான் பிச்சைக்காரனே ஆகிவிடப் போகிறேன், அப்புறம் எல்லாம் சுகம் எனக்கு" என மாகாந்தி மன்னன் கூறினன்.

இதுகேட்டு அதிசயமடைந்த மந்திரி சற்றுநேரம் சிந்தித்து, "அரசனே, அதனிலும் இல்லை சுகம்" என்றனன். என்றுபின்னரும், 'பெரியஇவ்வுலகத்தில் பிச்சைக்காரர்எத்தனையோபேர் இருக்கின்றார். அவர்கள் தாம் சுகப்பட்டிருக்கின்றார்களோ வென்று அவர்களையே கேட்டுத் தெரிந்துகொள்ளலாமே. அவர்களில் யாரேனும் சுகப்பட்டிருப்பவன் தென்படுவானானல், பிறகு, நீ பிச்சைக்காரன் ஆகிவிடலாம். அதன்முன் அவசரப்பட்டு நீ உன் கிரீடத்தைப் பிச்சைப்பாத்திரமாகத் திருப்பிவிடுவது அறிவன்று" என்று எடுத்துக் கூறினன்.

அரசனும் இந்தச் சோதனைக்குச் சம்மதித்தான். மந்திரியும் மாகாந்திவேந்தனும்புறப்பட்டனர். தம்நகரும் தேசமும் அன்றி இவர் சென்றடைந்ததேசங்கள் பலப்பல. எதிர்ப்பட்ட பிச்சைக்காரர்களும் எண்ணிறந்தோர். ஒவ்வொரு பிச்சைக்காரனாக இவர் அவனவனுடைய நிலைமையைப் பற்றிக் கேட்டுக்கொண்டே வந்தார். எல்லாரும் தத்தம் நிலைமையைச் சொல்லிச் சொல்லித் தலையில் கையைவைத்து அழுதனர். தான் கண்ட அக்கனவும் பயன்படாதுபோலிருக்கின்றதே என்று சஞ்சலப்பட்டான் அரசன். தான் சொன்னதே சரியென்ற நிச்சயத்தின் உறுதியைக் கண்டான் மந்திரி அம் மந்திரியின் முகத்தைப் பார்க்க நாணினன் மன்னவன்.

இரண்டு வருடங்கள் கழிந்தன. அரசனும் மந்திரியும் கோசாம்பி தேசம் சென்று சேர்ந்தனர். அங்கு ஓர் பிச்சைக்காரன்தென்பட்டான். அவன்முகத்தில் துன்பக்குறி யொன்றுமில்லை. மிகவும் சந்தோஷமாகவேயிருந்தான். அரசன் அப்பிச்சைக்காரனைத்தன் மந்திரிக்குக்காட்டி, "கடையில், நானே ஜெயித்தேன், பார்; நாமுன்னே கண்ட பிசசைக்காரர்களெல்லாம், தமக்குவாய்த்திருக்கின்ற சுகத்தை அனுபவிக்கத்தெரியாத மூடர்கள் என்னுடைய கனவை மெய்ப்பிக்க இதோ இருக்கின்றான் ஒருவன்" என்றனன்.

'அரசே அவசரம் வேண்டா, இவனையும் சென்று விசாரிப்போம் வா", என்றுமந்திரி அரசனை அப் பிச்சைக்காரனுக்கு அருகே அழைத்துச் சென்றான்.

பிச்சைக்காரனை இவர்களைநோக்கிச் 'சுகமோ' என முறைப்படி வினவினன்.

அரசன் புன்னகை அரும்பி, "அதுபற்றிபேதான் உன்னைக் கேட்க வந்திருக்கின்றோம். நாங்கள் இதுவரையில் எத்தனையோ பிச்சைக்காரர்களைச் சந்தித்தோம். அவர்களெல்லாரும் மிகவும் துன்பமுடையவர்களாய் இருந்தனர். நீ மாத்திரம் சந்தோஷமுடையவனாய் இருக்கின்றாய். இதற்குக் காரணம் என்ன, சொல்" என்று வினவினன்.

கேட்டனன் பிச்சைக்காரன். "என் கதியும் அப்படித் தான். ஒவ்வொரு நாளும் நான் படுகின்ற தொல்லைக்கு எல்லை இல்லை இதற்கிடையில், நான் ஒரு அரசனாய்விட்டதாக நேற்றிரவு ஓர் கனக்கண்டேன். என் வாழ்நாளிலெல்லாம் நான் சுகப்பட்டது அக்கனவு எவ்வளவு நேரம் இருந்ததோ அவ்வளவு தான். அந்தச் சொப்பனத்தை நினைத்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றேன்", எனக் கூறினன்.

அரசன் மந்திரியின் முகத்தைப் பார்த்தான். மந்திரி, "சொப்பனத்தில் அன்றோ சுகம்" என்றனன். அறிவோடு அமைதியும் வாய்ந்தவனாய் அம்மாகாந்திவேந்தனை அச்சாந்திதேசம் மீண்டும் பெற்றது.

மலர்வனம்

நல்லவள் நீயே நங்காய்.

காமத்திற்குக் கண் உளதேனு மிலதேனும் ஆகுக. காதலுக்கோ மதியின் சூழ்ச்சி மிகவுளது. தன் ஒரு நாயகன்பால் நல்லன்புடையாள் மனைவியொருத்தி, அவன் குற்றத்தைக்கொள்ளாமல் காத்த பரிசு இது, நண்பர்காள், நயந்து காண்மின்—

தன் மெல்லியல்மனைவியை நீத்தொரு நாயகன் பரத்தையிற் பிரிந்திருந்துமீண்டனன். இன்னது செய்தானே என்று அவன்பால் வெகுளி மிகப் பொங்கிய தோழி, தன் தலைவியை நண்ணி, "நின்னல மிகழ்ந்து பரத்தையைநச்சிச் சென்றிருந்தவன் மீண்டும் இன்று நம் மனைக்குவருகின்றான்; அவன்பால் அன்புயாதும் காட்டாமல், பழித்து அகற்றிவிடு" என்று வற்புறுத்தினள். அதற்கு உடன்பட்டவள்போல், தலைவி தோன்றினளாயினும், வந்தநாயகனை நயந்தேற்று முன்னினும்பன்மடங்கு அன்புகூர்ந்தனள். பிறகு, தன்னுரைக்கு மாறாக இவ்வாறு ஒழுகிய தலைவியைக் கடிந்து பேசுங் கருத்தினளாய் வருகின்றாள் தோழி. அவளை அன்புடன் தழுவி இது சொல்லுவாள் தலைவி—

நெடிய திரண்ட தோள்வளை நெகிழக்
கொடிய னாகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலையின் முகந்திரி யாது
கடவுட் கற்பி னவனே பேணி
மடவை மன்ற நீயெனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுர்
பழியாங் கொல்பவோ காணுங் காலே.

—குறுந்தொகை 252.

['நெடிய திரண்டதோள்களில் அணிந்த வளைகள் நெகிழ்ந்துவிழும்படி கொடுமைபுரிந்து அகன்ற மலைநாடன் திரும்பிவந்தபோது தெய்வத் தன்மை வாய்ந்த கற்பினால் முகங்கோணுமல் அவனை இனிது வரவேற்று, அவனையே தெய்வமென்று பேணி, நீ மிகவும் அறியாமையை உடையவளாயினாய்' என்று கடிந்து கூறி என்னைப் பிணங்கும்படி தூண்டி, அவ்வாறு நான் செய்யாமையால் என்மீது கோபங்கொள்ளாதே, தோழி. அவரோ உயர்ந்தோர் மதிக்கும் புகழையும் எண்ணுர்; தகாதசெயல் என்று நாணவும் மாட்டார். ஆராயுமிடத்து, பழிதான் எப்படி அவரைப் பொருந்தும்]

ஆகையால் நல்லதொன்றுந் தங்காத அவரிடத்தில் பழிதான் எங்ஙனம் தங்கக்கூடும் என்ற கொள்கையாற்றான் அவரைப்பழிகூருமல் ஏற்றுக்கொண்டாளாம் இம்மாதராள். புலத்தற்கு எத்தனையோ காரணங்கள் கற்பிக்கும் மடவாரைக் கண்டுள்ளோம்; மற்று, நண்பர்காள், புலத்தற்குக் காரணம் இருந்தும் கலந்துவந்ததற்குக் காரணமொன்று கற்பித்த மங்கை நல்லாள், வாழி, இவள் திறம் என்றுங் கண்டதில்லையே.

கலா நிலயச் சொல்லூடாட்டம் 1.

இடம்—வலம்

1. கள்.
3. சன்னியாசி.
5. பூமி.
7. சூரியன்.
8. இருட்டு.
10. நிர்த்தித்த.
11. குடம்.
13. தடி.
14. உயிர்.
15. காதலன்.
17. இனித்தல்.
19. முருகக்கடவுள்.
20. கொடு.
22. விஷ்ணு.
23. குடிக்க.
24. ஓர் பெரும்புலவர்.
26. குதிரை.
27. வில்லையுடையவன்

■	1	2	■	3		4	■	5	6
7					■	8	9		
	■		■	10				■	
■	11		12		■		■	13	
14		■		■	15		16		■
17						■		■	18
■		■		■	19				
20		21	■	22		■		■	
	■	23			■	24		25	
■	26		■	27			■		■

மேல்—கீழ்

1. சந்திரன்.
2. குதிரை.
3. வருத்தம்.
4. கட்டளையிட்டான்.
5. காப்பாற்று.
6. அழுதல்.
7. நயனம்.
9. அமிழாமல் மேலே இரு.
11. சேர்த்தல்.
12. பஞ்சுச் செடி.
13. அரசன்.
14. முதல்.
15. குறைதல்.
16. அடைமானம்.
18. திருடர்.
20. ஆறு.
21. புத்திரி.
22. கோவலன் காதலி.
24. ஓர் யுகம்.
25. விரோதம்.

கடைசிநாள்:—1934 வது வருடம், ஜூலை மாதம், 12-ஆம் தேதி.

பரிசு:— கலாநிலயம். 1928, 1930, 1931, 1932, 1933, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப்லேதர் - கில்ட் பைண்ட் வால்யூம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி 1934ஞ ஜூலை 12உக்குள் எம்மிடம் சேரும்படி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்குமட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் இதுமுதல் அவ்வவ்முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களையெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒரு வருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடுபல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

வேப்பெண்ணெயின் பயன்:-இலங்கையில், வைத்திய வசதிகள் உள்ள நகரங்களைவிட வைத்திய வசதியில்லாத நாட்டுப்புறங்களில் பிரசவத்தால் ஏற்படும் மரணங்கள் மிகவுங் குறைவாய் இருக்கின்றனவாம். இதற்குக் காரணம் வேப்பெண்ணெயை உபயோகிப்பதே என்று டாக்டர் வால்ட்டர் பீரஸ் சொல்லுகிறார். இலங்கையில் சிங்கள மாதர்களுக்கும் தமிழ் மாதர்களுக்கும் பிரசவமானபிறகு வெள்ளைப்பூண்டு இஞ்சிச்சாறுகளுடன் அரை அவுன்ஸ்வேப்பெண்ணெ கொடுக்கிறார்களாம். அத்துடன் வேப்பெண்ணெயை ஜனனேந்திரியங்களில் பூசவும் செய்கிறார்களாம். பிரசவ வீடுகளில் வேப்பெண்ணெய் விளக்கு எரிப்பதுடன் வேப்பம் புண்ணாக்கைக் கொளுத்திப் புகை போடுகிறார்களாம். வேப்பமரத்தின் இலைமுதல் எண்ணெய் வரை எல்லாப் பொருள்களும் நுண்ணிய நோய்க்கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்திருக்கின்றன. இதைப்பற்றி மேலும் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம்என்று அந்தவைத்தியர் எழுதுகிறார்.

* * *

நாகூர் ஆண்டவர் அற்புதம்:—சென்னை ராயப்பேட்டைப் பசார் வீதியில் சைனு பேகம் என்ற மாதும் அவர்கணவர் ஜானிபாஷா என்பவரும் வசித்துவந்தார்கள். பேகத்திற்கு 27 மாதமாக வயிற்று வலியாயிருந்தது. ஒரு மாதத்திற்குமுன் ஒரு மகா புருஷன் அவளைத் தம்மிடம் அழைப்பதுபோலத் தோன்றியதாம். அவள் பந்துக்கள் அவளைப் பல்லாவரம் தர்க்காவிற்குக் கொண்டு போனார்கள். அங்கும் மேற்படி மகான் தோன்றி அவளை நாகூருக்குவரும்படி சொன்னாராம். அங்குச்சென்றதில் மகானை நாகூர் ஆண்டவர் அடிக்கடி தோன்றினாராம். அந்தமாதுக்குச் சமீபத்திலொரு குழந்தை பிறக்குமென்றும் பின் வயிற்றுநோய் இராதென்றும் சொன்னாராம். அப்படியே அந்த மாது அங்குச் சென்ற 27-ம் நாள் காலையில் வலியேற்பட்டுத் தர்க்காவில் ஒரு குழந்தை பிறந்ததாம். நோயும் நீங்கிவிட்டது. இதுபற்றியே அங்குப் பேச்சாயிருக்கிறது. நாகூர் ஆண்டவர்மீது இப்பொழுது அதிக பக்தி ஏற்பட்டுவிட்டதாம். ஆண்டவன் அருள்பெற்ற அந்த மாதையும் அவரது குழந்தையையும் ஆயிரக்கணக்கான ஜனங்கள்போய்ப் பார்த்துவருகிறார்கள்.

* * *

கல்கத்தாவில் ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மிகவும் நோயாயிருந்தார். அவர் நிலை ஆபத்தாயிருந்தது. இனிப் பிழைக்கமாட்டார் என்பதைக் கண்ட அவர் மனைவி தன் மணாளன் அருகில் சென்று தான் அவருக்குமுன் இறந்துபோக நிச்சயித்து இருப்பதாகவும் தன்னையும் அவருடன் வைத்தே கொளுத்த வேண்டும்என்றும்கூறினாள். பிறகு அவள் மண்ணெண்ணெயைத் தன்மீது ஊற்றிக்கொண்டு தீவைத்துக்கொண்டு இறந்துவிட்டாள். அவள் இறந்த சில மணிநேரங்களுக்கப்பால் அவள் கணவரும் இறந்துபோனார். இருவரும் ஒருங்கே கொளுத்தப்பட்டனர்.

* * *

காதல் அறி கருவி:-தற்சமயம், பெல்கிரேடிலுள்ள விஞ்ஞான சாஸ்திரி ஒருவர், காதலை அளக்கும்கருவியொன்றைக் கண்டுபிடித்திருக்கின்றார். இக்கருவியால் காதலர் இருவரின் காதல் வேட்கை எவ்வளவிருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்கலாமாம். இனி விவாகம் செய்துகொள்ள விரும்பும் இருவரின் காதல் எவ்வளவு தூரம் ஒற்றுமையாயிருக்கின்றதென்று பரிசோதனை செய்யப்படும். தம்பதிகளாக விரும்பும்இருவரின் காதலும் அளவில் சரியாயிருந்தால் இப்படிப்பட்டவர்கள்விவாகம்செய்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். காதல் அளவுவித்தியாசமிருக்குமாயின், அவர்கள் விவாகம்செய்து கொள்ளக் கூடாதெனப் பிரித்து விட்டுவிடப் படுவார்கள்.

* * *

கிழவியும் இளவரசரும்:—சக்கரவர்த்தி ஜார்ஜ் மன்னரின் மூத்தபுதல்வரும்பட்டத்திற்குரிய இளவரசருமான வேல்ஸ் இளவரசர் சிறிதுகாலத்திற்குமுன்னர் உத்தர வேல்ஸில் சுற்றுயாத்திரை செய்தபொழுது ஹொலிஹெட் என்னும் இடத்தில் 101 வயதுள்ள ஒரு கிழவி தம்மைப் பார்க்க முடியாமலிருப்பது பற்றி மிகுந்த வருத்தமுற்றிருப்பதாகக் கேள்விப்பட்டார். உடனே இளவரசர் தாம் குறித்த பாதையை விட்டு நெடுந்தூரம் விலகி அக்கிழவியின் இருப்பிடம் சென்று அவள் வீட்டில் தங்கி அவருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவளிடம் விடை பெற்றுச் சென்றாராம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
“இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி”
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)